
'மின்ரோநெற்' என்ற

# 'வொலிபோல்'

## MINTONET ENTRA VOLLEYBALL




796
தேவேந்
SL/PR

‘மின்ரோ நெற

# ‘வொலிபோல்’

## MINTONET entra VOLLEYBALL


*ஆசிரியர்*

**த.ம. தேவேந்திரன்** *(Dip.in. Sports)*

**உடற்கல்வி விரிவுரையாளர்**



வெளியீடு

**உடற்கல்வி மன்றம்,**

**கல்வியியற் கல்லூரி,**

**வவுனியா.**

நூற்பெயர் : 'மின்ரோநெத்' என்ற 'வொலிபோல்'

ஆசிரியர் : த. ம. தேவேந்திரன்

முதற்பதிப்பு : 1997 மார்கழி

பதிப்புரிமை : திருமதி எஸ். ரி. ஜெ. தேவேந்திரன்

அட்டைப்படம் : க. மயூரன்

பக்க வடிவமைப்பு : விஜய கிருபா

வெளியீடு : உடற்கல்வி மன்றம்,
கல்வியியற் கல்லூரி, வவுனியா

பதிப்பகம் : 'ஒலிம்பியாட்' பதிப்பகம்

முகவரி : "மந்திரிபவனம்"
இறம்பைக்குளம்
வவுனியா
தொ. பே. : 024 - 22523

அச்சுப் பதிப்பு : கார்த்திகேயன் பிறைவேட் லிமிட்டெட்
501/2 காலி வீதி
கொழும்பு 06.
தொலைபேசி : 595875

விலை : 60/-

எமது அரசினால், இலங்கையின் தேசிய விளையாட்டாக
'வொலிபோல்' 1991-04-10ம் திகதி வர்த்தமானி மூலம்
பிரகடனப்படுத்தப்பட்டது

# சமர்ப்பணம்

இலங்கைக் கல்வி உலகில், குறிப்பாகத் தமிழ் கல்வி உலகின் வளர்ச்சியில் தனது முழுமையான வாழ்வை அர்ப்பணித்துப் பணியாற்றியவர். ஆசிரியராக, அதிபராக, விரிவுரையாளராக, பாடவிதான அபிவிருத்தி நிலையப் பிரதம கல்வி அதிகாரியாக, சீடா நிறுவனத்தின் விசேட கல்விப் பணிப்பாளராக, வடக்கு, கிழக்கு மாகாண கல்வி அபிவிருத்திப் பணிப்பாளராக, கல்வியியற்கல்லூரி பீடாதிபதியாக, இணைந்த பல்கலைக்கழகப் பணிப்பாளராக, கல்வி ஆலோசகராகக் கடமை புரிந்தவர். பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்களின் ஆலோசகராகப் பணிபுரிந்து பாமர மக்களின் வளர்ச்சிக்கு வழி காட்டியவர்.

எனக்கு மட்டுமல்ல என்னைப் போன்ற பலருக்கும்பல நற்துறைகளிலும் வழிகாட்டியவர். இன்று மீளாத்துயில் கொள்ளும் கல்வியியலாளர்.

**கலாநிதி சிரோன்மணி இராஜரட்ணம்**

அவர்களுக்கு

**இந்நூலைக் காணிக்கையாகச்**

**சமர்ப்பிக்கின்றேன்**

## Foreward

Even though Vollyball is now played in all parts of Sri Lanka, it is not popularised specially in Tamil areas. One of the reasons for this is, lack of complete knowledge in officiating and coaching aspects of this game.

I trust the book of Volleyball written by Mr. T.M. Devendran, Lectuer in physical Education, Vavuniya College of Education will increas the popularting of the game of Volleyball. This is one of the many reasons that led to the publication of this book.

He has specialy inculuded the history of Volleyball, International Lows, Development, Teaching Methods of this game suiable to students in year 10 and 11. This book particularly resource for the students, who offer Physical Education as a subject at the G.C.E. O/L Examination.

I have known Mr. Devendran for more than a decade. He attended many specialised courses in Training methods in Sri Lanka and abroad. He is one of the members of the Syllabus Committee of the Physical Education, also a member of the Editor and Translator of the modules in Physical Education of the National Institute of Education.

He has in immense expierance in writing books. He has written many books on Physical Education and sports also. He is a Versatile and a resource persanal with vast experince in the field of Physical Education and Games. He has been the cordinator for Vavuniya District of the Sri Lanka Board of Control for Volleyball.

I fervently hope this book "Mintonet Entra Volleyball" will be an asset and contiune to sevre all those who are engaged in the promotion of the game of Volleyball and sports in Sri Lanka. I wish him very well.

Mr. S. Thotaliyanaghe
National Volleyball Refree 'A', Gr.
Level - I Voley ball coach

Secretary
Sri Lanka Schools Volleyball
Association.

Lecturer,
Siyana College of Education
Veyangoda
97.11.21

## என்னுரை

உடற்கல்வி தொடர்பான விழிப்புணர்வு இன்று எமது நாட்டிலும் உருவாகி உள்ளதை நாம் காண்கின்றோம். ஒரு நாட்டின் வளர்ச்சி அந் நாட்டு பிரசைகளிலேயே தங்கி உள்ளது. இப்பிரசைகள் நற்பிரசைகளாக இருக்க வேண்டும். நற்பிரசைகளை உருவாக்குவதில் உடற்கல்வி பெரும் பங்கு வகுக்கின்றது, என்பதனை கல்விமான்கள், தத்துவவியலாளர்கள், உளவியல் அறிஞர்கள், பல நூற்றாண்டுகளுக்கு முன்பே உறுதியாகக் கூறியுள்ளனர்.

உடற்கல்வி தொடர்பாக எமது பாடசாலைகளில் இதுவரை காலமும் போதியளவு கவனம் செலுத்தப்படவில்லை என்பதை எவரும் மறுக்கமாட்டார்கள். எனினும் பாடசாலைகளில் உடற்கல்விப் பாடம் கட்டாய பாடம் ஆக ஆக்கப்பட வேண்டும் என்பது தொடர்பாக கல்வியி யலாளர்களும் அரசியல்வாதிகளும் இன்று கருத்தொருமித்தது உள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

இதன் முன்னோட்டமாக 1998 ஆம் ஆண்டு உடற்கல்விப் பாடம் தொழில் நுட்பப்பாடங்களுள் ஒன்றாக க.பொ.த (சா/த) பரீட்சையாகப் பரீட்சிக்கப்பட உள்ளமை நாட்டின் புத்திஜீவிகளால் பெரிதும் வரவேற்க் கப்பட்டுள்ளது. 10ஆம், 11ஆம் ஆண்டு உடற்கல்விப் பாடத்திட்டத்தில் மாணவர்கள் நான்கு ஒழுங்கமைத்த விளையாட்டுக்களைத் தெரிவு செய்ய வேண்டும். அண்மையில் நடாத்தப்பட்ட ஓர் ஆய்வின் படி 'வொலிபோல்' விளையாட்டை ஏறத்தாழ தொன்நூற்று இரண்டு சதவீதமானவர்கள் தெரிவு செய்துள்ளமையைக் காணக் கூடியதாக உள்ளது.

இவர்களது தேவையையும், இவ்விளையாட்டு ஆர்வலர்களது தேவையையும் உணர்ந்து இந்நூலைத் தொகுத்து எழுத முன்வந்தேன். சர்வதேச, தேசிய ரீதியில் அமைந்த வரலாறு, சர்வதேச விதிகள், 10 ஆம், 11ஆம் ஆண்டுகளுக்கான பாடத்திட்டத்திற்கு அமைவான விடயங்கள், என்பவற்றை இந்நூலில் அடக்கி உள்ளேன். இந்நூலினை எனது அன்பான மாணவர்கள் வெளியிடுவதையிட்டு பெருமகிழ்வடைகிறேன். உங்கள் மேலான ஆலோசனைகளை நான் என்றும் அன்புடன் நாடி நிற்கிறேன்.

**த.ம. தேவேந்திரன்.**

**1997.11.12**



## வரலாறு

1895 ஆம் ஆண்டு அமெரிக்க நாட்டவரான வில்லியம் ஜி. மோகன் (William G.Morgan) என்பவரால் இவ்விளையாட்டு முதன் முதலில் உலகிற்கு அறிமுகம் செய்யப்பட்டது. இவர் அவ்வேளை 'சமசூட்ஸ்' மாநிலத்தின் (Massachusets) ஹொலி யோர்க் நகரத்தின் கிறிஸ்தவ இளைஞர் சங்கத்தின் (Y.M.C.A.) உடற்கல்விப் பணிப்பாளராகப் பணிபுரிந்தார்.

இக்காலத்தில் அமெரிக்காவில் கூடைப்பந்தாட்டம் மிகவும் பிரபல்யம் வாய்ந்ததாக இருந்த போதிலும் மிகுந்த களைப்பை அளித்ததால் இவ்விள்ளயாட்டில் மக்கள் நாட்டம் குறைந்தது. இதனால் 'வொலிபோல்' விளையாட்டு உருப் பெற்றது என வரலாறு கூறுகிறது. 6அடி உயரத்தில் இரு கம்பங்களுக்கிடையே வலை கட்டப்பட்டு வீரர்களை இரு குழுக்களாகப் பிரித்து வலைக்கு மேலால் பந்தை எதிர்பக்கங்களுக்கு அனுப்பக் கூடிய முறையில் ஆரம்பத்தில் விளையாடினர். இதற்காக காற்றடித்த இறப்பர் உறையை (Bladder) பாவித்தனர். பின்னர் 21 அவுன்ஸ் நிறையும், 25-27 அங்குல சுற்றளவும் கொண்ட பந்தினால் 50 அடி நீளமும், 25 அடி அகலமும் கொண்ட மைதானத்தில் விளையாடினர்.

ஆரம்பகாலத்தில் **'மின்ரோ நெற்' (Minto Net)** என இவ்விளையாட்டிற்கு பெயரிட்டிருந்தனர். ஆனால் 1896ம் ஆண்டு அமெரிக்காவின் ஸ்பிரிங்பீல் உடற்கல்விக் கல்லூரியில் நடைபெற்ற கிறிஸ்தவ இளைஞர் சங்கங்களின் பணிப்பாளர் கூட்டத்தில் மோகன் இப் புதிய விளையாட்டுப் பற்றி எடுத்தியம்பினார். ஒரு குழுவில் தலா ஐந்து பேர் வீதம் பிரித்து ஒரு விளையாட்டுப் போட்டியை நடாத்தினர்கள். இப் போட்டியைப் பார்வையிட வந்த கலாநிதி அல்பிரட் ரீ. ஹல்ஸ்டன் (Dr. Altrial T. Halstead) என்பவர் இவ்விளையாட்டின் இயல்பிற்கேற்ப இதனை ''வொலிபோல்'' (Volleyball) எனப் பெயரிடலாம் என ஆலோசனை வழங்கினார். அனைவரும் இதனை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளவே இப்பெயர் நிலைக்கலானது. (தமிழ், சிங்கள மொழிகளிலும் 'வொலிபோல்' என அழைப்பதே பொருத்தமானதாகும். கரப்பந்தாட்டம் என்று அங்கீகரிக்கப்பட்ட பிரிதொரு விளையாட்டு நடைமுறையில் இருப்பதை யாவரும் அறிவர்) வருடா வருடம் விதிகள் சிலது ரத்துச் செய்யப்பட்டும், புதிய விதிகள் சேர்க்கப்பட்டும் இவ் விளையாட்டு மெருகூட்டப்பட்டு வருகிறது.

- 1900 இல் புள்ளி வழங்கும் முறை உருவானது.
- 1912 இல் 'சயிட் அவுட்' முறை அறிமுகமானது
- 1917 இல் வலை கட்டப்படும் உயரம் 8 அடியானது
- 1918 இல் ஒரு குழுவில் ஒரு வேளையில் 6 பேர் விளையாடலாம் என ஏற்றுக் கொள்ளப்பட்டது.

- 1920 இல் மைதானத்தின் அளவு 60' X 30' (அடி)யாகக்கப்பட்டது.
- 1921 இல் மத்திய கோடு வரையப்பட்டது
- 1922 இல் ஒரு குழு மூன்றுமுறை மட்டுமே பந்தைத் தொடலாம் (அடிக்கலாம்) என்ற விதி உருவானது.
- 1924 பெண்களுக்கான சில விதிகள் உருவானது. எனினும் இது நிலைக் கவில்லை.
- 1992 பார்சலோனாவில் நடைபெற்ற xxiii வது காங்கிரஸ் கூட்டத்தில் விதிகள் தொடர்பான கலந்துறையாடலில் முடிவு எடுக்கப்பட்டவற்றுள் முக்கியமானவை.
  - முழங்காலின்மேல் எங்கும் பந்து படலாம்.
  - 'றலி' முறையிலான புள்ளியிடும் முறை
- 1994 இல் அதென்சில் நடைபெற்ற xxiv வது காங்கிரஸ் பல மாற்றங்கள் ஏற்பட்டன. குறிப்பாக
  - பந்து உடம்பில் எங்கும் படலாம் (விதி இல. **14.4.1**)
  - **ஒரு உடல் அசைவில் பந்தின் பல தொடுகைகள் (விதி. இல. 14.4.3b)** ஏற்றுக் கொள்ளப்படலாம்.
  - விளையாடாத போது வலையை ஸ்பரிசித்தல் வழுவாக மாட்டாது (விதி. இல. 16.4.1)

மேலும் விதி இலக்கங்கள் **1.1.2, 5.1.5., 14.4.2, 14.5b, 14.5d**

1997 இல் அமுல்படுத்தப்படவுள்ள விதிகள்

- கட்டாய இரண்டு குறு நேர **இடை** வேளைகள் முறையே 5, 10, புள்ளிகள் பெற்ற நிலையில் வழங்கு**தல்**
- ஒரு கோஸ்ட்டி **விரும்பிப் பெறும் இர**ண்டு குறுகிய இடைவேளைகள் **ஒன்றாக மட்டுப்படுத்தப்படல்**.
- மத்தியஸ்த்**தர் விசிலை ஊதி முத**லில் பந்தைப் பணிக்கும் பக்கத்திற்கு கையைக் காட்டிய பின்பு **தவறினைச்** சுட்டிக் காட்டல்.

**ஒலிம்பிக் போட்டிகளில் வொலிபோல்......**

1957 ஆம் ஆண்டு பல்கேரியா நாட்டில் சோப்பியா நகரில் சர்வதேச ஒலிம்பிக் நிர்வாக சபைக் கூட்டம் நடைபெற்றது. அங்கு வருகை தந்தவர்களுக்கு வொலிபோல் கண்காட்சிப் போட்டி ஒன்று நடாத்திக் காட்டப்பட்டு இவ் விளையாட்டுத் தொடர்பான விளக்கம் அளிக்கப்பட்டது. இந் நிகழ்வினை அன்றைய



சர்வதேச வொலிபோல் சம்மேளனத் தலைவர் திரு போல் லிபாலுட் முன்னின்று நாடத்தினார். இவரது முயற்சி பலன் அளித்தது. 1964 ஆம் ஆண்டு டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் வொலிபோலும் (இரு பாலாருக்கும்) ஒரு நிகழ்ச்சியாகத் நடாத்தப்பட முடிவு எடுக்கப்பட்டது.

1895 இல் வித்திடப்பட்ட இவ் **விளையாட்டு உலகின்** நாலாதிக்கிற்கும் பரவியது.

**சர்வதேச ரீதியாக....**

கி.பி. 1946 ல் சர்வதேச வொலிபோல் சம்மேளன அமைப்புக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. எனினும் கி.பி. 1947 ல் பிரான்ஸின் பரிஸ் நகரத்தில் பிரான்ஸியரான போல் லிவாவுட்டின் பங்களிப்புடன் முலாவது சர்வதேசக் வொலிபோல் சம்மேளனம் தாபிக்கப்பட்டது. கி.பி. 1948 முதல் இற்றைவரை சர்வதேச வொலிபோல் சம்மேளனத்தின் தலைவராக மிக்ஸிக்கன் நாட்டைச்சேர்ந்த ருபன் டீ.ஏ. கொஸ்த்தா என்பவர் இருந்து வருகின்றார். தற்போது இச்சம்மேளனம் சுவிற்சர்லாந்தில் லுசேன் நகரத்தில் அமைக்கப்பட்டதுடன் 175 நாடுகள் அங்கத்துவம் பெற்று அது உலகின் மிகப்பெரிய விளையாட்டுச் சம்மேளனமாகக் காணப்படுகிறது. உலக விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளுமாக 160 மில்லியன் பேர் இவ்விளையாட்டில் ஈடுபடுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. உலகில் மிகப் பங்களிப்புள்ள விளையாட்டாக உதைபந்து விளங்குவதுடன் வொலிபோல் இரண்டாம் இடத்தைப் பெறுவதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

முதலாவது சர்வதேச 'வொலிபோல்' போட்டி ஆண்களுக்காக மாத்திரமே நடாத்தப்பட்டது. கி.பி. 1949ல் சர்வதேசப் போட்டி செக்கோகிலோகியாவில் நடைபெற்றபோது வெற்றிக் கேடயம் ருசியாவினால் சுவீகரிக்கப்பட்டது. முதலாவது பெண்களுக்கான போட்டி கி.பி. 1952ல் ரஷ்யாவில் நடைபெற்றது. இதில் வெற்றிக்கேடயம் ரஷ்யா**வினால் சுவீகரிக்கப்பட்**டது.

**விளையாட்டின் வியாபகம்**

கி.பி. 1895 **வித்திடப்பட்ட இவ்விளையாட்**டு உலகின் நாலா திகதிற்கும் பரவலாகியது.

| | |
|---|---|
| கி.பி. 1900 - இந்தியா | கி.பி. **1917 - பிரான்சு** |
| கி.பி. 1906 - **சீனா** | கி.பி. 1919 - செக்கோசிலோவகியா |
| கி.பி. 1910 - பிலிப்பைன்ஸ் | **கி.பி. 1923 - ரஷ்யா** |
| கி.பி. 1913 - ஜப்பான் | **கி.பி. 1938 - இத்தாலி** |
| கி.பி. 1914 - இங்கிலாந்து | கி.பி. 1945 - போர்த்துக்கல் |
| கி.பி. 1916 - இலங்கை | கி.பி. 1946 - பெல்ஜியம் |

## இலங்கையில் வொலி போல் வளர்ச்சி

1916 ல் கிறிஸ்தவ இளைஞர் சங்கத்தின் பணிப்பாளராக இருந்த ரொபர்ட் வோல்ட்டர் கமக் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது. கி.பி. 1922ல் கொழும்பு நகரில் வொலிபோல் சங்கங்கள் 25 தாபிக்கப்பட்டிருந்தன. கி.பி. 1932ல் சிற்றி வொலிபோல் போட்டி என்ற பெயரில் முதலாவது சவால் கிண்ணப்போட்டி நடாத்தப்பட்டது இக்கிண்ணத்தைப் 'பிரைஸ் பார்க்' விளையாட்டுக் கழகம் சுவீகரித்துக் கொண்டது.

- 1930ல் அகில இலங்கை வொலிபோல் சங்கம் அமைக்கப்பட்டது.
- 1941ல் ஆறு பேர் கொண்ட கோஷ்டி, அகில இலங்கை வொலிபோல் சங்கம் அமைக்கப்பட்டது.
- 1951ல் அனைத்துச் சங்கங்களையும் சேர்த்து இலங்கை வொலிபோல் சம்மேளனத்துக்குப் பதிலாக வொலிபோல் கட்டுப்பாட்டுச்சபை அமைக்கப் பட்டது. எனினும் மீண்டும் வர்த்த மானி மூலம் சம்மேளனம் உருவாக்கப் பட்டது.
- யாழ்ப்பாணம் பருத்தித்துறையைச் சேர்ந்த டாக்டர் என்.கே.சின்னையா ஐக்கிய வொலிபோல் சங்கத்தை உருவாக்கினார்.
- அன்றய நாட்களில் யாழ் நகரைச் சேர்ந்த தம்பையா, உடுவிலைச் சேர்ந்த மணியம் என்பவர்கள் இலங்கையில் பிரபல்யம் வாய்ந்தவர்களாகும்.
- இவ்வருடம் வொலிபோல் கட்டுப்பாட்டுச்சபை கலைக்கப்பட்டு, கௌரவ விளையாட்டுத்துறை அமைச்சரினால் சபை அமைக்கப்பட்டதுடன் இச்சபையினால் மாவட்ட இணைப்பாளர்களும் நியமிக்கப்பட்டனர்.

இலங்கைப் பாடசாலை மட்டத்தில் கல்வி உயர் கல்வி அமைச்சின் விளையாட்டுத்துறைத் திணைக்களத்தின் ஊக்கமும் வழிகாட்டலும் வொலிபோலின் வளர்ச்சிக்கு பெரிய உந்து கோலாக விளங்குகின்றது. 15,17,19 வயதுப் பிரிவினர் இருபாலாருக்குமான போட்டிள் கோட்ட, மா வட்ட, மாகாண மட்டப் போட்டிளாக நடாத்தப்படுகின்றன. இத்துடன் அகில இலங்கைப் பாடசாலைகள் வொலிபோல் சங்கம் 16,18,20 வய திற்குட்பட்டோர்கான (இருபாலாருக்கும்) போட்டிகளை வருடாவருடம் நடாத்தி வருகின்றது.



### சர்வதேச வொலிபோல் சம்மேளனத்தின் இலச்சினை

**FIVB - Federation International de Volleyball**

### இலங்கை வொலிபோல் சம்மேளனத்தின் இலச்சினை

**SLVB - Sri Lanka Volleyball Federation**

### இலங்கை வொலிபோல் கட்டுப்பாட்டுச் சபையின் இலச்சினை

**Sri Lanka Board of Control for Volleyball**

# சர்வதேச வொலிபோல் விதிமுறைகள்

## மைதானமும் உபகரணங்களும்

**விதி 01. விளையாட்டுப்பிரதேசம் உரு 1, 2**

விளையாட்டு மைதானமும் சுதந்திர வலயமும் விளையாட்டுப் பிரதேசத் துள் அடங்குகின்றன.

**1.1 விளையாட்டு மைதானம்:**

1.1.1 விளையாட்டு மைதானம் 18 மீற்றர் நீளமும் 9 மீற்றர் அகலமும் உடைய செவ்வகமாகவும் அதன் எல்லைகளுக்கு அப்பால் சுதந்திர வலயம் 3 மீற்றருக்குக் குறையாமலும் இருக்க வேண்டும். மைதானத்தின் உயரே (வெளியில்) சுதந்திர வலயம் உட்பட 7 மீற்றர் உயரம் வரை தடைகளற்ற வெளியாக இருக்க வேண்டும்.

1.1.2 சர்வதேசப் போட்டிகளிலும், ஒலிம்பிக்போட்டிகளிலும், சுதந்திர வலயம் பக்கக் கோடுகளில் இருந்து 6 மீற்றரும் பின்பக்கக் கோட்டில் இருந்து 9 மீற்றருக்குக் குறையாமல் இருப்பதுடன் சுதந்திர வலயம் உட்பட மேற்கு பகுதி ஆகக்குறைந்தது 12.5 மீற்றர் உயரம் வரை தடைகளற்ற வெளியா கவும் இருக்க வேண்டும்.

**1.2 விளையாட்டுத் திடலின் மேற்பரப்பு.**

1.2.1 விளையாட்டுத் திடலின் மேற்பரப்பு (தளம்) மட்டமாக, கிடையாக, சீராக இருக்க வேண்டும்.

1.2.2 சர்வதேசப் போட்டிகளுக்கு மேற்பரப்பு, பலகை அல்லது செயற்கைப் பொருட்களால் மாத்திரம் அமைக்கலாம். இம்மேற்பரப்புக்காகச் சர்வ தேச வொலிபோல் சம்மேளனத்தின் அனுமதியை ஏலவே பெற்றிருத்தல் வேண்டும்.

1.2.3 சர்வதேசப் போட்டிகளுக்காக விளையாட்டுத் திடலின் மேற்பரப்பு விளையாட்டு வீரர்களுக்கு எந்தவோர் ஊறையும் ஏற்படுத்தாத முறை யிலும் கரடுமுரடான, வழுக்கக்கூடியதான தன்மைகள் அற்றும் அமைந் திருத்தல் அவசியம்.

1.2.4 உள்ளக விளையாட்டரங்குகளில் மைதானம் இள நிறத்தைக் கொண்ட தாக இருக்க வேண்டும். சர்வதேசப் போட்டிகளுக்காக எல்லைக் கோடுகள் வெள்ளை நிறத்தாலும் மைதானத்தின் மேற்பரப்பும் சுதந்திர வலயமும் வேறுபட்ட நிறங்களாலும் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

1.2.5 திறந்தவெளி அரங்குகளில் நீர் வழிந்தோடுவதற்காக 01 மீற்றருக்கு 05 மில்லிமீற்றர் என்ற வகையில் சரிவானதாக இருக்க வேண்டும். மைதானத்தின் எல்லைக் கோடுகள் தடிப்பான பொருட்களால் ஆக்கப் படலாகாது.

**1.3 மைதானத்தின் கோடுகள்.**

1.3.1 எல்லா எல்லைக் கோடுகளும் 05 சென்றிமீற்றர் அகலமாகவும் மைதானத்தினதும் ஏனைய கோடுகளினதும் நிறங்களை விட இள



நிறமானதாகவும் இருக்க வேண்டும்.

1.3.2 எல்லைக் கோடுகள் பக்கக் கோடுகள் இரண்டினாலும், பின் பக்கக் கோடு கள் இரண்டினாலும் (மைதானம்) அடையாளமிடப்பட்டிருக்கும். அக்கோடுகளும் மைதானத்துள் அடங்கியதாகும்.

1.3.3 மத்திய கோடு.

மத்திய கோட்டினால் விளையாட்டு மைதானம் 9 x 9 மீற்றர் அளவுள்ள இரு சம பகுதிகளாகப் பிரிக்கக்கூடிய முறையில் வலைக்குச் செங்குத்தாக மைதானத்தின் பக்கக்கோடுகள் இரண்டுக்கும் இடையில் அடையாளமி டப்பட்டிருக்கும்.

**1.4 விளையாட்டு மைதான வலயங்கள்**

1.4.1 முன் வலயம்: மத்திய கோட்டுக்குச் சமாந்திரமாக அதன் அச்சில் இருந்து 03 மீற்றர் தூரத்தில் பக்கக் கோடுகள் இரண்டுக்கும் இடையில் தாக்கற்கோடு அடையாளமிடப்பட்டு (அக்கோடும் உள்ளடங்கி யுள்ளதாக) முன் வலயம் வேறு படுத்தப்பட்டிருக்கும். இவ்வலயம் வரையறையில்லாது பக்கக் கோடுகளை மேவி நீண்டுள்ளதாகக் கருதப்படுகிறது.

1.4.2 பணிப்பு வலயம்.

இவ்வலயமானது பின்பக்கக் கோட்டில் இருந்து அதற்குக்குத்தாக 20 செ.மீற்றர் தூரத்தில் 15 செ. மீற்றர் நீளம் உள்ள கோடுகள் இரண்டினால் அடையாளமிடப்பட்டிருக்கும். இதன் அகலம் 9 மீற்றர்களாகும் இரண்டு கோடுகளும் வலயத்துக்குரியனவே. பணிப்பு வலயம் சுதந்திரவலய முடிவுரை நீண்டுள்ளது.

1.4.3 பிரதியீட்டு வலயம் (வீரர் அமரும் வலயம்).

நீட்டப்பட்டதாகக் கருதப்படும் தாக்கற்கோடுகள் இரண்டினால் எல்லைப்படுத்தப்பட்டுச் சுதந்திர வலயத்தில் புள்ளி பதிவோனின் மேசைவரை உள்ள பிரதேசம் பிரதியீட்டு வலயம் எனக் கருதப்படு கின்றது.

1.4.4 சர்வதேச வொலிபோல் சம்மேளன திறமைக்கான போட்டிகளில் உடலை உஸ்னப்படுத்தும் (Warm up) பகுதி 3 மீ x 3 மீ என சுதந்திரவலயத்திற்கு அப்பால் அமைக்கப்பட்டிருக்கும். (உரு.01)

**விதி 02. வலையும் கம்பங்களும் உரு : 03**

**2.1 வலை**

வலையின் நீளம் 9.50 மீற்றரும் அகலம் 01 மீற்றரும் ஆகும். இது மத்திய போட்டிற்குச் செங்குத்தாக அமைய வேண்டும். வலையின் ஒரு கண் 10 சென்றிமீற்றர் அளவுள்ள சதுரங்களாக இருக்க வேண்டும். வலையின் மேற்பகுதியில் 05 சென்றிமீற்றர் அகலமான வெள்ளை நிறக் கன்வஸ் நாடா வலையின் முழு நீளத்துக்கும் இடப்பட்டிருக்கும். அக் கன்வஸ் நாடாவின் ஊடாக வளையக்கூடிய கம்பியொன்று புகுத்தப்பட்டு வலை

முழுவதும் இறுக்கமாக நீட்டப்பட்டிருக்க வேண்டும். வலையின் கீழ் இரு அந்தலைகளும் அடைப்புக்களூடாகச் செல்லும் நூலொன்றினால் இறுக்கமாகக் கட்டப்பட்டிருக்கும்.

**2.2 பக்கப்பட்டிகள்**

மைதானத்தின் பக்கக் கோடுகளும் மத்திய கோடும் சந்திக்கும் புள்ளிக்குச் செங்குத்தாக வலையின் இரு மருங்கிலும் 01 மீற்றர் நீளமும் 05 சென்றிமீற்றர் அகலமும் கொண்ட இரண்டு நாடாக்கள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும் அவை வலையின் தொடர்புடைய பகுதியாகக் கருதப்படும்.

**2.3 உணர் தடி (Antenna)**

கண்ணாடி இழை போன்ற வளையக்கூடிய பொருளால் ஆன 1.80 மீற்றர் நீளமும் 10 சென்றிமீற்றர் விட்டமும் கொண்ட இரண்டு தடிகளால் ஆனதாகும். இத்தடியின் ஒவ்வொரு 10 சென்றிமீற்றரும் வெள்ளை, சிவப்பு நிறங்களால் மாறி மாறி நிறம் தீட்டப்பட்டிருக்க வேண்டும். வலையின் மேல் மட்டத்தில் இருந்து 80 சென்றிமீற்றர் உயரமாகப் பக்க அடையாளங்களுடன் இயைந்து வெளிப் பக்கமாக வலையின் இரு மருங்கிலும் இத்தடி பொருத்தப்பட்டிருக்க வேண்டும். (உரு:03) இத்தடி வலையின் தொடர்பு காட்டிய ஒரு பகுதியாகக் கருதப்படுவதுடன் அது நெடுக்காக வரையறையின்றி உயர்ந்திருக்கும் எனவும் அதன் உயரம் பந்து வலைக்கு மேலால் செல்லவேண்டிய எல்லையைக் காட்டுகிறது. (உரு: 05 விதி ; 15.1.1)

**2.4 வலையின் உயரம்.**

2.4.1 ஆண்கள்: 02.43 மீற்றர் பெண்கள்: 02.24 மீற்றர்.

2.4.2 வலையின் மத்தியிலும் இரண்டு அந்தலைகளிலும் கோடுகளுக்கு மேலும் அதே அளவு உயரம் இருக்க வேண்டும். எனினும் விதிக்கமைவான உயரத்தைவிட 02 சென்றிமீற்றருக்கு மேற்படாதவாறு இரண்டு அந்தலைகளிலும் அமைந்திருக்கலாம்.

**2.5 வலை கட்டப்படும் கம்பங்கள்**

2.5.1 வலை கட்டப்படும் **கம்பத்தின் உயரம்** 02.55 மீற்றராக இருக்க வேண்டும். அவ்வுயரத்தை **மாற்றக்கூடிய** முறையில் அமைத்து கொள்வது மிகவும் பொருத்தமானது. அவை உருளையாகவும், செப்பமானதாகவும் இருக்க வேண்டும்.

2.5.2 பக்கக் கோட்டில் இருந்து .**50 தொடக்கம்** 1.00 மீற்றருக்கு இடைப்பட்ட தூரத்தில் கம்பங்கள் நடப்பட **வேண்டும்**. கம்பங்கள் கம்பியினால், நிலத்துடன் கட்டப்படலாகா. எதுவித அபாயமோ தடையோ ஏற்படாது அமைக்கப்பட வேண்டும்.



**2.6 மேலதிக உபகரணங்கள்.**

அனைத்து மேலதிக உபகரணங்களும் சர்வதேச வொலிபோல் சம்மேளனத்தின் விதிகளுக்கு அமைவாக இருக்க வேண்டும்.

## *விதி 03.* பந்து

**3.1 விசேட இயல்புகள்.**

உட்பகுதி றப்பரால் அல்லது அதற்குச் சமமான டியூப்பினாலும், வெளிப் பகுதி மடியக்கூடிய தோலினாலாக்கப்பட்ட கூட்டினாலும் ஆன கோள வடிவினதாகப் பந்து இருக்கவேண்டும்.

நிறம் :- ஒரே தன்மையான இள நிறம்.

சுற்றளவு :- 65-67 சென்றிமீற்றருக்கு இடைப்பட்டது.

நிறை:- 260 - 280 கிராம்களுக்கு இடைப்பட்டது.

உள்வளியமுக்கம்:- **392 to 444 mbar (0.40 - 0.45 kg/cm²)**

**3.2 பந்துகளின் ஓரினத் தன்மை.**

போட்டிகளுக்காகப் பயன்படுத்தப்படும் எல்லாப் பந்துகளும் சுற்றளவு, நிறை, வளி அமுக்கம், வகை என்பனவற்றில் ஒரே தன்மை வாய்ந்தவையாக அமைய வேண்டும். சர்வதேசப் போட்டிகளுக்குச் சர்வதேச வொலிபோல் சம்மேளனம் அனுமதித்துள்ள பந்துகளையே பயன்படுத்த வேண்டும்.

**3.3 மூன்று பந்துகள் பயன்படு முறை.**

சர்வதேசப் போட்டிகளில் மூன்று பந்துகள் பயன்படுத்தப்படுவதுடன் பந்து பொறுக்குவோர் ஆறுபேர் ஈடுபடுத்தப்படுவர். அவர்கள் மைதானத்தின் சுதந்திர வலய அந்தங்களில் நடுவர்களுக்குப் பின்னால் நிலை நிறுத்தப்படுவர். (உரு:10)

# பங்குபற்றுபவர்கள்

## *விதி 04* குழுக்கள்

**4.1 அங்கீகாரமும் பதிவும்**

4.1.1 ஒரு குழுவில் 12 விளையாட்டு வீரர்களும் ஒரு பயிற்று வோனும், ஓர் உதவிப்பயிற்றுவோனும், ஒரு முகாமையாளரும், வைத்தியர் ஒருவரும் உள்ளடங்குவர். சர்வதேசப் போட்டிகளில் மேற்படி வைத்தியர் போட்டிக்கு முன்னதாகச் சர்வதேச வொலிபோல் சம்மேளனத்தினால் அங்கீகாரம் பெற்றிருத்தல் வேண்டும்.

4.1.2 புள்ளிப் பதிவுத்தாளில் பெயர் பதிவு செய்யப்பட்டவர்கள் மாத்திரம் போட்டியிட அனுமதிக்கப்படுவர்.

4.1.3 குழுத்தலைவரும் பயிற்றுவோனும் புள்ளிப் பதிவுத்தாளில் கையொப்பமிட்ட பின்னர் விளையாட்டு வீரர்களின் பெயர்களில் மாற்றம் செய்ய அனுமதிக்கப்படுவதில்லை.

4.2 குழுத்தலைவன்.
4.2.1 புள்ளிப்பதிவுத்தாளில் பெயர் பதியப்பட்ட விளையாட்டு வீரர்களில் இருந்து தலைவர் தெரிவு செய்யப்படலாம்.
4.2.2 தலைவனை இனங்காண்பதற்க மார்பின் முன்பக்க இலக்கத்துக்குக் கீழ் 8 x 2 சென்றிமீற்றர் அளவுள்ள, தலைவர் எனப் பெயரிடப்பட்ட பட்டி இணைக்கப்பட வேண்டும்.
4.2.3 தலைவர் மைதானத்தில் இல்லாத வேளைகளில் பயிற்று வோனால் அல்லது தலைவரால், மைதானத்தில் உள்ள விளையாட்டு வீரர் ஒருவர் தலைவராக நியமிக்கப்படலாம்.

## விதி 05. விளையாட்டு வீரர்களின் உபகரணங்கள்

5.1 உபகரணங்கள்
5.1.1 விளையாட்டுக்குரிய உடை ஒரு ஜர்ஸி, ஒரு கட்டைக்காற்சட்டை, விளையாட்டுக்குப் பொருத்தமான காலணி ஆகியவையாகும்.
5.1.2 ஜர்ஸி, கட்டைக்காற்சட்டை என்பன ஒரே தன்மையுடையதாக, தூய்மையாக, ஒரே நிறமுடையதாக இருக்க வேண்டும்.
5.1.3 காலணிகளின் குதிப்பகுதி விசேடமாக அமைக்கப்படாமலும் ஒரே நிறமுடையதாகவும் இருப்பதால் அல்லது தோலினால் ஆனதாகவும் இருக்க வேண்டும்.
5.1.4 ஜர்ஸியில் முன், பின் பகுதி மத்தியில் (மார்பு,முதுகு) 1 இல் இருந்து 18 வரையான இலக்கங்கள் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும்.
5.1.5 ஜர்ஸியின் முற்பகுதியில் 10 சென்றிமீற்றரும் பிற்பகுதியில் 15 சென்றிமீற்றரும் உயரமுடைய இலக்கங்கள் ஜர்ஸியின் நிறத்துக்கு வேறுபட்ட நிறத்தில் இலக்கத்தைப் பிணைக்கும் நாடா 02 சென்றிமீற்றர் அகலமுடையதாகவும் இருக்க வேண்டும்.

5.2 அனுமதிக்கப்பட்ட மாற்றங்கள்
5.2.1 போட்டியில் பங்கு கொள்ளும் இரண்டு குழுக்களும் ஒரே நிறத்தாலான சீருடையை அணிந்திருப்பின் அம்மைதானத்திற்குரிய குழு சீருடையை மாற்ற வேண்டும். பொது மைதானமாயின் புள்ளிப் பதிவுத்தளில் பெயர்களைப் பதிந்த முதல் குழு உடைகளை மாற்ற வேண்டும்.
5.2.2 1வது மத்தியஸ்தரின் அனுமதியுடன் தேவைப்படின் வீரர்கள் காலணியின்றி விளையாடலாம். போட்டிச் சுற்று ஒன்றின் முடிவில் அல்லது பிரதியீட்டின் போது ஒரு வீரர் அல்லது பலர் ஈரமாகிய சீருடையை மாற்றிக் கொள்ளலாம். ஆனால் புதிய சீருடையில் முன்பு இருந்த நிறமும் இலக்கமும் இருக்க வேண்டும்.
5.2.3 குளிரான காலநிலை நிலவும் போது 1வது மத்தியஸ்தரின் அனுமதியுடன் வீரர்கள் பயிற்சி பெறும் உடையை (Track kit) அணிந்து விளையாட அனுமதிக்கலாம். எனினும் அவை ஒரே நிறமுடையதாக இருக்க



வேண்டியதுடன் விதிமுறையாக இலக்கமிடப்பட்டதாகவும் இருக்க வேண்டும். (விதி: 5.1.4)

5.3 அனுமதியற்ற உடைகளும் உபகரணங்களும்
5.3.1 தங்க நகைகள், உலோக ஆபரணங்கள், ஊசி போன்ற காயம் ஏற்படுத் தக்கூடியவற்றை அணிதல் தடை செய்யப்பட்டுள்ளது.
5.3.2 தேவையாயின் வீரர்கள் மூக்குக்கண்ணாடி அணியலாம்.
5.3.3 உரிய இலக்கமின்றியும் (விதி: 5.1.4,5.1.5) வேறுவித நிற உடை அணிந்தும் விளையாடலாகாது.

## விதி 06. பங்குப்பற்றுபவர்களின் உரிமைகளும் பொறுப்புக்களும்

6.1 அடிப்படைப் பொறுப்புக்கள்
6.1.1 வொலிபோல் விதிமுறைகள் பற்றித் தெரிந்திருப்பதுடன் அவற்றைக் கட்டாயம் கடைப்பிடிக்கவும் வேண்டும்.
6.1.2 மத்தியஸ்தரின் தீர்ப்பினை ஏற்பதுடன் பங்கு கொள்வோர் விவாதிப்ப தைத் தவிர்க்க வேண்டும். போட்டி தொடர்பாக ஏதும் அறிய வேண்டின் தமது தலைவரூடாகத்தொடர்பு கொள்ளலாம்
6.1.3 மத்தியஸ்தருக்கு மட்டுமல்ல ஏனைய உத்தியோகத்தர்கள், எதிர்க்குழு வினர், பார்வையாளர் அனைவருடனும் சுமுகமாகப் பழகுதல் வேண் டும்.
6.1.4 மத்தியஸ்தரின் தீர்ப்புக்களுக்குக் குந்தகம் விளைவிக்காமலும் தனது குழுவைப் பிழையான வழியில் நடக்கத் தூண்டாத வகையிலும் செயற்பட வேண்டும்.
6.1.5 வேண்டும் என்று விளையாட்டைத் தாமதப்படுத்தலாகாது.
6.1.6 குழுவினரின் நடத்தைக்கும் ஒழுக்கத்திற்கும், தலைவரும் பயிற்றுவிப் போருமே பொறுப்பானவர்களாவர்.
6.1.7 போட்டி வேளையில் குழுவினர் அங்கத்தினர் தம்மிடையே கதைக் கலாம். (விதி:6.3.4)

6.2 தலைவர்
6.2.1 போட்டி ஆரம்பமாவதற்கு முன்பு தமது குழுவிற்காகப் புள்ளிப் பதிவேட்டில் கையெழுத்திடவும் நாணயத்தைச் சுண்டிப் பூவா - தலையா பார்த்தலும் இவரது கடமையாகும்
6.2.2 போட்டி வேளையில், குழுவின் தலைவர், மைதானத்தில் நிற்கும் வரை தலைவராக இருப்பார். விளையாடாத வேளைகளில் மத்தியஸ்தர்க ளுடன் இவர் கதைக்கலாம். (6.1.2)
அ. போட்டி விதிகள், செயற்பாடுகள் பற்றி அல்லது அவற்றுக்கான கருத்துப் பரிமாற்றம் பற்றி, அவருக்கோ அல்லது குழுவின் ஏனைய வீரர்களுக்கோ ஏற்படும் பிரச்சினைகளைத் தெளிவுப டுத்தும் நோக்கில், உரிய மத்தியஸ்தர்களின் முன்வைப்பது தலைவரது கடமையாகும். அவ்விடயங்கள் பற்றித் தமக்கு

அதிருப்தியாயின் அதுபற்றி மத்தியஸ்தருக்கு அறிவித்துப் போட்டியின் இறுதியில் புள்ளிப் பதிவுத்தாளில் விதிமுறையான எதிர்ப்பை மத்தியஸ்தருக்கு உடனடியாக அறிவிக்க வேண்டும். (விதி:26.2.4)

ஆ பின்வரும் விடயங்களில் அனுமதியைக் கோரலாம்:

- உடைகளை அல்லது உபகரணங்களை மாற்றிக் கொள்வதற்கு.
- குழுக்களின் விளையாட்டு வீரர்கள் நிலைகொள்ளும் இடங்களைப் பரீட்சிப்பதற்க.
- விளையாட்டு மைதானத் தளம் வலை, பந்து என்பவற்றைப் பரீட்சிப்பதற்கு.

இ போட்டி விதிமுறைக்கமைவான இடைநிறுத்தங்களைக் கோருதல். (விதி:20.1)

6.2.3 போட்டி முடிவடைந்த பின் மத்தியஸ்தருக்கு நன்றிகூறிப் புள்ளிப் பதிவுத்தாளில் கையொப்பமிட்டுத் தீர்ப்புபற்றி முன்னர் எதிர்ப்பைக் கூறியிருப்பின் அதனைப் புள்ளிப் பதிவுத்தாளில் எழுதி உறுதிப்படுத்த வேண்டும். (விதி:6.2.2)

### 6.3 பயிற்றுவிப்போன்.

6.3.1 போட்டிக்கு முன்னர் விளையாடுபவர் பெயரும் இலக்கமும் புள்ளிப் பதிவுத்தாளில் சரியாகக் குறிக்கப்பட்டுள்ளதா என்பதை அறிந்து கையொப்பமிடுதல்.

6.3.2 ஒவ்வொரு போட்டிச் சுற்றுக்கு முன்னரும் வீரர்களின் ஆரம்ப ஒழுங்கு நிலைமுறையைக் குறித்துக் கையொப்பமிட்டு, இரண்டாம் மத்தியஸ்தரிடம் அல்லது புள்ளி பதிவோனிடம் கையளிக்க வேண்டும்.

6.3.3 போட்டியின் போது புள்ளி பதிவோனுக்கு அண்மையில் தமக்குரிய இடத்தில் அமர்ந்திருக்க வேண்டும்.

6.3.4 போட்டியின் போது பயிற்றுவிப்போன் தனது இருக்கையில் அமர்ந்து அல்லது, ஏனைய விளையாட்டு வீரர்கள் தமது ஆசனங்களில் அமர்ந்திருக்க, ஆயத்தம் செய்யும் பிரதேசத்தில் நின்று தமது விளையாட்டு வீரர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்க முடியும். ஆனால் இதனால் ஏனையோருக்கு இடைஞ்சலாகவோ அல்லது விளையாட்டைத் தாமதப் படுத்துவதாகவோ இருத்தல் ஆகாது.

### 6.4 உதவிப் பயிற்றுவிப்போன்.

6.4.1 இவர் குழுவுடன் அமர்ந்திருப்பார். அவருக்கு எவ்வித வேலையோ பொறுப்போ வழங்கப்படுவதில்லை.

6.4.2 பயிற்றுவிப்போன் வெளியே சென்றுள்ளபோது தலைவனின் கோரிக்கையின் பேரில் 1வது மத்தியஸ்தரின் அனுமதியுடன் பயிற்றுவிப்போனின் கடமைகளை இவர் நிறைவேற்றலாம்.



### 6.5 பங்கு கொள்வோர் இருக்கை. (உரு 01)

6.5.1 குழுக்களுக்கான இருக்கைகள் புள்ளி பதிவோனின் மேசைக்கு இரு மருங்கிலும் சுதந்திர வலயத்திற்கு வெளியே இருக்க வேண்டும்.

6.5.2 விளையாடாத வீரர்கள் தமக்குரிய இருக்கைகளில் அமர வேண்டும்; அல்லது ஆயத்தம் செய்யும் பிரதேசத்தில் நிற்க வேண்டும். பயிற்றுவிப் போனும் ஏனைய உறுப்பினர்களும் இருக்கையில் அமர்ந்திருக்க வேண்டும்.

9.5.3 இருக்கையில் அமருவதற்கும் ஆயத்தம் செய்யும் பிரதேசத்தில் நிற்பதற்கும் குழு உறுப்பினர்களுக்கு மட்டுமே அனுமதி உண்டு. (விதி:4.1.1)

6.5.4 விளையாட்டில் ஈடுபடாத வீரர்கள் போட்டி நடைபெறும் போது பந்தின்றி ஆயத்தத்தில் ஈடுபடலாம். அங்கீரிக்கப்பட்ட சர்வதேசப் போட்டிகளில் தமது இருக்கைகள் உள்ள பகுதியின் அந்தத்தில் சுதந்திர வலயத்திற்கு வெளியே 3 x 3 மீற்றர் அளவில் நிலத்தில் வரையப்பட்ட சதுரமான பிரதேசமே ஆயத்தம் செய்யும் பிரதேசமாகும். (Warm - up area)

6.5.5 போட்டிச் சுற்றுக்களுக்கிடையே உள்ள இடைவேளையில் சுதந்திர வலயத்துள் பந்துடன் பயிற்சி பெறலாம்.

## *புள்ளி, போட்டிச்சுற்றுக்கள், போட்டியில் வெற்றி பெற்றோர்*

*விதி 07.* புள்ளி வழங்கும்முறை

### 7.1 போட்டியொன்றில் வெற்றி பெறுதல்:-

7.1.1 போட்டியொன்றில் வெற்றி பெறுவதற்கு ஒரு குழு, போட்டிச் சுற்றுக்கள் மூன்றில் வெற்றி பெறவேண்டும்.

7.1.2 போட்டிச் சுற்றுக்கள் 2-2 ஆகச் சமன் பெறின் முடிவெடுக்கும் 5 ஆவது சுற்று நிறுத்தப்படாது (Rally Point System) புள்ளி சேகரிக்கும் முறையில் நடாத்தப்படும். (விதி 7.4)

### 7.2 போட்டிச் சுற்றொன்றில் வெற்றி பெறுதல்:-

7.2.1 போட்டிச் சுற்றொன்று 15 ஆவது புள்ளியில் முடிவடையும் 14-14 எனச் சமப்படும் போது, ஒரு குழுவை விட மற்றையகுழு இரண்டு புள்ளிகள் கூடுதலாகப் பெறவேண்டும். (உதாரணம்:- 16-14,17-15)

7.2.2 எனினும் 16-16 எனச் சமப்படும் வேளையில் 01 புள்ளி கூடுதலாக இருந்தாலும் 17 ஆவது புள்ளியைப் பெற்றதும் குறித்த குழுவிற்கு அச்சுற்றின் வெற்றி உரித்தாகும்.

**7.3 ஒரு சந்தர்ப்பத்தை வெற்றி கொள்ள. (Rally) ஒரு குழு பந்தைப் பணிப்பதில், பெறுவதில் அல்லது வேறு பிழை ஒன்றைச் செய்தால் எதிரணிக்குப் பின்வரும் அடிப்படையில் பந்தைப் பணிக்கச் சந்தர்ப்பம் அளிக்கப்படும்;**

7.3.1 முதலாவதாக எதிரணி பணித்திருப்பின் அவர்களுக்கு அடுத்த பணிப்பு கிடைப்பதுடன் புள்ளியொன்றும் கிடைக்கும். (பணித்த குழுவிற்கே பந்தும் புள்ளியும்.)

7.3.2 முதலாவதாக, மற்றைய குழு பணித்திருப்பின் எதிரணிக்குப் புள்ளியின் றிப் பந்து கிடைப்பதுடன் விளையாட்டு வீரர்கள் இடம் மாறிக் கொள்ள வும் வேண்டும். (விதி இல 7.4 தவிர)

**7.4 முடிவெடுக்கும் சுற்றில் (05 ஆவது சுற்றில்) ஒரு சந்தர்ப்பத்தை வெற்றி கொள்ள:-**

முடிவெடுக்கும் சுற்றில் ஒரு சந்தர்ப்பத்தை வெற்றிகொள்ளும் ஒவ்வொரு சந்தர்ப்பதிலும் அவ்வாறு வெற்றிகொள்ளும் குழுவிற்குப் பின்வரும் விளைவுகளுடன் புள்ளியொன்று கிடைக்கும்.

7.4.1 பணிக்கும் குழு அச்சந்தர்ப்பத்தை வெற்றிகொண்டால் அவர்களுக்கும் மீண்டும் பணிக்கும் சந்தர்ப்பமும் புள்ளியொன்றும் கிடைக்கும்.

7.4.2 பந்தைப் பெறும் குழு அச்சந்தர்ப்பத்தை வெற்றி கொண்டால் புள்ளியும் பணிப்பும் கிடைக்கும்.

**7.5 தவிர்ந்து கொள்ளுதலும் பூரணமற்ற குழுவும்.**

7.5.1 போட்டியொன்று ஆரம்பிக்கப்படும் முன்னர், ஒரு குழு அழைக்கப்பட்ட பின்னர் போட்டியிடாது தவிர்த்துக் கொள்ளுமாயின் எதிரணிக்குச் சுற்று 3-0 என வெற்றி அளிக்கப்படுவதுடன் ஒவ்வொரு சுற்றுக்கும் 15-0 புள்ளிகள் என்ற முறையில் புள்ளிகள் தீர்மானிக்கப்படும்.

7.5.2 நியாயமான காரணமின்றிக் குறித்த நேரத்தில் மைதானத்திற்குச் சமுகமளிக்காத குழுவினர் அப்போட்டியிலிருந்து விலகிக் கொண்டனர் என வெளிப்படுத்தப்பட்டு விதி 7.5.1 இன் அடிப்படையில் செயற்படுத் தப்படும்.

7.5.3 போட்டியின் போது குறித்த ஒரு குழு அச்சுற்றில் அல்லது போட்டியில் பூரணமற்று இருப்பின் (விதி 9.11.4) அச்சுற்று அல்லது அப்போட்டியை அவர்கள் இழப்பர். எதிரணிக்கு வெற்றி அளிக்கப்படும். அவர்கள் மேலும் பூரணமற்றிருப்பின் எஞ்சிய சுற்றுக்களுக்கு 15-0 என்ற புள்ளி அடிப்படையில் எதிரணிக்கு வெற்றி அளிக்கப்படும். பூரணமற்ற குழுவின் முன்னைய புள்ளிகளும் வெற்றி பெற்ற சுற்றுக்களும் அவ் வாறே நிலைத்திருக்கும்.

## போட்டி தொடர்பான ஆயத்தம், விளையாட்டு ஒழுங்கு

### விதி 08. போட்டிதொடர்பான ஆயத்தம்

8.1.1 மைதானத்துள் நுழைவதற்கு முன்னர் 1வது மத்தியஸ்தரால் தலைவர்கள் இருவரும் அழைக்கப்பட்டு நாணயம் மூலம் பூவா தலையா பார்க்கப் படும். நாணயத்தின் அனுகூலத்தைப் பெற்றவர் முதலாவதாகப் பணிக் கும் சந்தர்ப்பத்தை அல்லது விளையாட்டு மைதானத்தின் பக்கத்தைத் தெரிவு செய்வார். மற்றவர் எஞ்சியதில் ஒன்றைத் தெரிவு செய்யலாம்.



8.1.2 முடிவெடுக்கும் சுற்று (இறுதி) நடைபெற வேண்டுமாயின் முதலாவது மத்தியஸ்தர் மீண்டும் நாணயத்தின் மூலம் அனுகூலத்தை வேண்டும்.

**8.2 உடலை உஷ்ணப்படுத்தும் காலம் (Warm up)**

8.2.1 போட்டி ஆரம்பிப்பதற்கு முன்னர் வேறு ஒரு மைதானத்தில் உடலை உஷ்ணப்படுத்தினால், போட்டி நடைபெறும் மைதானத்தில் வலைக்கு அண்மையில் இதற்காக 03 நிமிடங்கள் வழங்கப்படும். வேறு மைதா னங்கள் இல்லாதபோது 05 நிமிடங்கள் வழங்கப்படும். (ஒவ்வொரு குழுவிற்கும்)

8.2.2 இரண்டு குழுக்களின் தலைவர்களும் விரும்பினால், இரண்டு குழுவின ரும் ஒரே நேரத்தில் வலைக்கு அண்மையில் ஆயத்தம் செய்வதற்குச் சந்தர்ப்பத்தினை 8.2.1 விதிப்படி 06 அல்லது 10 நிமிடங்களும் வழங்கலாம்.

8.2.3 இரண்டு குழுக்களும் வெவ்வேறாக ஆயத்தப்படுத்தலுக்குச் சந்தர்ப்பம் வழங்கின், பணிக்கவுள்ள குழு முதற் சந்தர்ப்பத்தைப் பெறும்.

### விதி 09. விளையாட்டு வீரர்களின் இட ஒழுங்குமுறை

**9.1 ஆரம்ப ஒழுங்கு**

9.1.1 ஒவ்வொரு போட்டிச்சுற்றும் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரும், பயிற்றுவிப்போன், விளையாட்டு வீரர்கள் நிலைபெறும் ஒழுங்குமுறை யை வரிசைப்படுத்தல் பத்திரத்தில் எழுதி கையொப்பமிட்டுக் குறித்த நேரத்தில் இரண்டாம் மத்தியஸ்தரிடம் அல்லது புள்ளி பதிவோனிடம் கையளிக்க வேண்டும். (விதி:10.1.2)

அவ்வரவுப்பத்திரத்தில் உள்ளடக்கப்படாத விளையாட்டு வீரர்கள் அச்சுற்றின் பிரதியீட்டாளர்களாகக் கருதப்படுவர்

9.1.2 ஒழுங்குமுறையை உள்ளடக்கிய வரிசைப்படுத்தல் பத்திரம் கையளிக்கப் பட்ட பின்னர் அதில் திருத்தங்கள் செய்ய முடியாது.

9.1.3 போட்டிக்கு முன்னர் வீரர்களின் ஒழுங்குமுறையில் மாற்றங்கள் ஏற்படுமாயின் அதனை வரிசைப்படுத்தல் பத்திரத்திற்கேற்பத் திருத்தி வீரர்களை நிலைகொள்ளச் செய்ய வேண்டும். இதற்குத் தண்டனை வழங்கப்படுவதில்லை. வரிசைப்படுத்தல் பத்திரத்தில் இல்லாத விளை யாட்டு வீரர்கள் மைதானத்தில் இருந்தால் அவர்களையும் வரிசைப் படுத்தல் பத்திரத்திற்கு ஏற்ப மாற்றிக் கொள்ள வேண்டும். இதில் தண்ட னை வழங்கப்படுவதில்லை. எனினும் அவ்விளையாட்டு வீரரை அல் லது வீராங்கனையை மாற்ற முடியாதெனப் பயிற்றுவோன் கூறுவா ராயின் இதற்காகச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டு அவை சட்டமுறையான பிரதியீடாகக் கருதப்பட்டுப் புள்ளிப்பதிவுத் தாளிலும் உள்ளடக்கப் படும்.

**9.2 விளையாட்டுவீரர் இட சுழற்சிமுறை**

9.2.1 போட்டிக்கு முன்னர் வீரர்கள் நிலைகொள்ளும் முறை ஆரம்ப

ஒழுங்குமுறை எனக் கருதப்படும் குறித்த சுற்று முடியும் வரை இது மாற்றப்படலாகாது.

9.2.2 போட்டி ஆரம்பிப்பதற்கு எந்நேரமும் ஒரு குழுவில் 06 விளையாட்டு வீரர்கள் இருத்தல் வேண்டும்.

## *விதி 10 விளையாட்டு வீரர்கள் நிலை கொள்ளும் இடம் சுழற்சியும்*

### 10.1 விளையாட்டு வீரர்கள் இடத்தில் நிலை கொள்ளல்

10.1.1 பணிக்கும்போது பணிப்பவர் தவிர்ந்த குழுக்கள் இரண்டும் தமது குழுவினருடன் இருக்க வேண்டியதுடன் விளையாட்டு வீரர்கள் 03 பேர் வீதம் 02 வரிசைகளில் அவர்கள் ஒழுங்கமைத்தும் இருக்க வேண்டும். இவ்வரிசை முறிந்திருப்பினும் தவறில்லை.

10.1.2 வலைக்கு அண்மையில் உள்ள விளையாட்டு வீரர்கள், முன்வரிசை விளையாட்டு வீரர்கள் எனக் கருதப்படுவதுடன் அவர்களின் இட அமைவு 04 (இடது), வி.வீ 03 (மத்திய) வி.வீ 02 (வலது) வி.வீ என இருக்கும். எஞ்சிய மூன்று பேரும் பின்வரிசை விளையாட்டு வீரர்கள் எனக் கருதப்படுவதுடன் அவர்களின் இட அமைவு 05 (இடது வி.வீ 06 (மத்திய),வி.வீ 01 (வலது) வி.வீ என அமையும். பின்வரிசை வீரர் யாவரும் சமதொகையில் உள்ள முன்வரிசை விளையாட்டு வீரர்களுக்குப் பின்னாலேயே நிற்றல் வேண்டும். (வி.வீ= விளையாட்டு வீரர்)

10.1.3 விளையாட்டு வீரர்களின் பாதத்தின் உள்ளங்கால் நிலம் பதிந்துள்ளதைப் பொறுத்தே இவர்களது இட அமைவு கருத்தில் கொள்ளப்படும். (உரு.4)

அ) முன்வரிசை விளையாட்டு வீரர்களின் பாதம் அவருடன் தொடர்புடைய பின்வரிசை விளையாட்டு வீரரின் பாதத்தைவிடச் சிறிதளவானது மத்திய கோட்டுக்கு அண்மியதாக இருக்க வேண்டும்.

ஆ) பக்க விளையாட்டு வீரரின் பாதம் மத்திய விளையாட்டு வீரரின் பாதத்தைவிடப் பக்கக்கோட்டுக்கு அண்மியதாக இருக்க வேண்டும்.

10.1.4 பந்தைப் பணித்த பின்னர் வீரர்கள் மைதானத்தில் அல்லது சுதந்திர வலயத்தில் எவ்விடத்துக்கும் சென்று விளையாடலாம்.

### 10.2 இடச் சுழற்சி

எதிரணியினர் பணித்த பின்னர் அவர்கள் செய்த தவறு ஒன்றின் காரணமாகப் பந்து பணிப்பதற்காகத் தம் அணிக்குக் கிடைக்கும் போது, எல்லா விளையாட்டு வீரர்களும் கடிகாரச் சுழற்சித் திசையில் (வலஞ்சுழியாக) ஒவ்வோர் இடமாக சுழற்சியாகச் சொல்ல வேண்டும்.

### 10.3 பிழையாக நிலை கொள்ளல்.

10.3.1 பந்து பணிக்கும் வேளையில் ஏனைய வீரர்கள் குறித்த இடங்களில் நிலை கொள்ளாதிருத்தல் தவறாகும். (விதி:10.1-1)

10.3.2 பந்தைப் பணிக்கும் போது விளையாட்டு வீரர்களின் இட அமைவில் தவறுகள் ஏற்பட்டாலும் பணிப்பில் தவறுகள் ஏற்படுமாயின் (விதி:17.8)



முதலில் பணிப்பில் ஏற்பட்ட தவறுக்குத் தண்டனை வழங்கப்படும். பணித்தபின் பந்தில் தவறுகள் ஏற்பட்டால் (விதி:17.9) அச்சந்தர்ப்பத்தில் விளையாட்டு வீரர்கள் குறித்த இடங்களில் காணப்படா விட்டால் அவர்கள் தவறு செய்ததாகக் கருதப்பட்டுத் தண்டனை வழங்கப்படும்.

10.3.3 இட அமைவில் தவறுகள் ஏற்படின் பின்வரும் விளைவுகள் ஏற்படும்:

அ) தவறிழைத்த அணியிலிருந்து பந்து (விதி 13.2.1) நீக்கப்படும்.

ஆ) விளையாட்டு வீரர்களைக் குறித்த, சரியான இடங்களுக்கு மாற்றிக்கொள்ள வேண்டும்.

### 10.4 பிழையான இடத்தில் நிலை கொள்ளல்

10.4.1 இடமாற்றத்தவறு என்றால் பணிப்பு இடமாற்ற முறைக்கு மாறாக இருப்பதாகும் (விதி:9.2) தவறு திருத்தப்பட வேண்டும். இது இட அமைவில் ஏற்பட்ட மாற்றமாகக் கருதப்பட்டு 10.3.3 விதிக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

10.4-2 தவறு நடைபெற்ற சந்தர்ப்பத்திலேயே புள்ளி பதிவோன் அதுபற்றி அறிவிக்க வேண்டும். அக்குழு தவறுசெய்த சந்தர்ப்பத்தின் பின் பெற்றுக்கொண்ட புள்ளி நீக்கப்பட்டு மற்றைய குழுவின் புள்ளியில் மாற்றம் செய்யலாகாது. இட அமைவு ஒழுங்கு முறையில் அல்லது இட மாற்றத்தில் தவறு இருககும் போது பெறப்பட்ட புள்ளியைத் தீர்மானம் செய்ய முடியாதவிடத்துத் தவறுசெய்த குழுவிற்குத் தண்டனை மாத்திரம் வழங்கப்படும்.

## *விதி 11 வீரர்களைப் பிரதியீடு செய்தல்*

### 11.1 வரைவிலக்கணம்

பிரதியீடு செய்தல் என்பது, மத்தியஸ்தர்களின் அனுமதியுடன் விளையாட்டு மைதானத்திலுள்ள வீரர் ஒருவரை மைதானத்தை விட்டு வெளியேற்றி, வேறு ஒரு வீரரை அதற்கப் பதிலாக மைதானத்திற்கு அனுப்புவதாகும்.

### 11.2 வீரர்களைப் பிரதியீடு செய்வதில் வரையறை.

11.2.1 கூடிய பட்சம் 06 பிரதியீடுகளை ஒரு போட்டிச் சுற்றில் ஒரு குழு பெற்றுக் கொள்ளலாம். ஒருவரை அல்லது பல வீரர்களை ஒரு வேளையில பிரதியீடு செய்யலாம்.

11.2.2 போட்டிச் சுற்றின் ஆரம்பத்தில் விளையாடிய ஒரு வீரர் அச்சுற்றின் போது மைதானத்திற்கு வெளியே சென்று மீண்டும் ஒரு முறை மாத்திரமே உள்ளே வர முடியும். அவருக்குப் பிரதியீடாக அனுப்பப்பட்ட வீரர் அவருக்குரிய இடத்துக்கு மட்டுமே வரலாம்.

11.2.3 பிரதியீடு செய்யப்பட்ட வீரர் ஒரு சுற்றில் ஒரு முறை மாத்திரமே மைதானத்துள் வரலாம். அவருக்குப் பதிலாக மைதானத்தை விட்டுச் சென்ற முதலாவது வீரர் மட்டும் மைதானத்துககு வந்த பின்னரே அவர் மைதானத்தை விட்டுச் செல்லலாம்.

**11.3 விசேட பிரதியீடு (விதிவிலக்கான)**

வீரர் ஒருவர் கடுமையாகக் காயம் அடைந்தால் சட்ட முறையான பிரதியீட்டைச் செய்யலாம். அவ்வாறின்றேல் 11.2 இல் குறிப்பிட்ட வரையறைகளுக்கு மேலாகப் பிரதியீடு செய்யலாம்.

**11.4 வெளியேற்றலுக்கான பிரதியீடு.**

மைதானத்திலிருந்து வெளியேற்றப்பட்ட அல்லது போட்டிக்குப் பொருத்தமற்றவர் என நீக்கப்பட்ட வீரர் ஒருருக்குகாக (விதி: 24.2.3.4) சட்ட முறையான பிரதியீடு மாத்திரம் செய்யலாம். அவ்வாறு செய்ய முடியாடிவின் இது பூரணத்துவம் அற்ற குழு எனப் பிரகடனப்படுத்தப் படும் (விதி: 7.5.3).

**11.5 சட்ட முறையற்ற பிரதியீடு**

11.5.1 விதி 11.2 இல் உள்ள வரையறைகளை (மீறிப் பிரதியீடு செய்தல் சட்டமுறை அற்றதாகும். (11.3 தவிர்ந்த)

11.5.2 குழுவொன்று சட்டமுறையற்ற பிரதியீட்டைப் பெற்றுக் கொண்டு விளையாட்டை மீண்டும் ஆரம்பிக்கும் போது பின்வருவனவற்றை மேற்கொள்ளலாம்:-

அ) அத்தவறுக்கான தண்டனையாக விளையாடும் சந்தர்ப்பத்தை நீக்குதல்.

ஆ) பிரதியீட்டில் உள்ள தவறு திருத்தப்படும்.

இ) அக்குழுவிற்கான தண்டனையாகப் பிழையான முறையில் பெற்றுக் கொள்ளப்பட்ட புள்ளிகளை நீக்குதலாகும். எதிரணி யினரின் புள்ளிகள் அவ்வாறே இருக்கும்.

## விளையாட்டின் முறைமை

*விதி 12 விளையாட்டின் நிலைமை*

**12.1 பந்தை விளையாட்டில் ஈடுபடுத்துதல்**

முதலாவது மத்தியஸ்தரின் ஊதி ஒலியுடன் பந்து விளையாட்டில் ஈடுபடுத்தப்படும். பணிக்கும் சந்தர்ப்பத்திலிருந்தே பந்து விளையாட்டில் ஈடுபடுத்தப்பட்டதாகக் கருதப்படும்.

12.2 பந்தை விளையாட்டில் ஈடுபடுத்தாமை

மத்தியஸ்தரின் ஊதி ஒலியுடன் பந்து விளையாட்டில் ஈடுபடுத்தப்படாது நிறுத்தப்படும். பந்து தொடர்ந்து ஆடப்பட்டால், ஆடப்படும்போது தவறு ஏற்படின், பந்து விளையாட்டில் ஈடுபடுத்தப்படவில்லை எனக் கருதப்படுவதால் இத்தவறு கவனத்திற் கொள்ளப்படுவதில்லை (13.2.3)

12.3 பந்து மைதானத்தின் உட்புறத்தில் தொடுதல்.

பந்து மைதானத்தின் எல்லைக் கோடுகள் உட்பட மைதானத்தைத் தொடுதல், பந்து உட்புறத்தில் தொடுதல் எனக்கருதப்படும் (விதி:1.3.2)



12.4 பந்து வெளிப்புறத்தைத் தொடுதல்

பந்து வெளிப்புறத்தைத் தொடுதலானது:-

அ) அது முற்றாக எல்லைக் கோடுகளுக்கு வெளியே நிலத்தைத் தொடுதல்.

ஆ) மைதானத்துக்கு வெளிப்புறத்தில் வெளிப் பொருள் ஒன்றுடன் ஸ்பரிசித்தல்.

இ) வலையின் எல்லைக்கு வெளிப்புறமாக உணர்தடி கம்பம், கயிறு போன்றவற்றில் ஸ்பரிசித்தல்.

ஈ) வலையின் எல்லைக்கு வெளிப்புறமாகக் குத்தாகப் பந்து முற்றாகச் செல்வதனாலும், பந்தின் ஒரு பகுதியாவது வலையின் எல்லைக்குக் குறுக்காக வெளிப்புறமாகச் செல்லுதல் (விதி:15.12,15.1.3 உரு:5)

*விதி 13. விளையாட்டில் ஏற்படும் தவறுகள்*

**13.1 வரைவிலக்கணம்**

13.1.1 விதிகளுக்கு முரணான எந்த விளையாட்டு முறைமைகளும் விளை யாட்டுத் தவறுகளாகக் கருதப்படுகின்றன.

13.1.2 விதிகளுக்கு அமைவாகத் தவறுகளையும் தண்டனைகளையும் தீர்மானித் தல் மத்தியஸ்தர்கள் பொறுப்பாகும்.

**13.2 தவறுகளுக்கான விளைவுகள்**

13.2.1 எல்லாத் தவறுகளுக்கும் தண்டனை உண்டு. தவறு செய்த அணியின் எதிர் அணியினர் பணித்திருப்பின், அவர்களுக்கு ஒரு புள்ளியும் தவறு செய்த அணியினர் பணித்திருப்பின் எதிரணிக்குப் பக்க மாற்றமொன்றும் கிடைக்கும். (விதி: 7.3) முடிவெடுக்கும் இறுதிச் சுற்றில் 7.4 விதிக்க மைய செயற்படுத்தப்படும்.

13.2.2 ஒரே நேரத்தில் ஒன்றின்பின் ஒன்றாக இரண்டு அல்லது பல தவறுகள் செய்யுமிடத்து முதலாவது தவறு மாத்திரம் கருத்தில் கொள்ளப்படும்.

13.2.3 இரண்டு அல்லது பல தவறுகள் இரு குழுக்களாலும் ஒரே சமயத்தில் செய்யப்பட்டால் அவை இரட்டைத் தவறுகள் எனக் கருதப்பட்டு மீண் டும் பணித்த குழுவிற்கே பணிப்புச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

*விதி 14 பந்தை விளையாட்டில் ஈடுபடுத்தல்*

**14.1 குழுவொன்று பந்தைக் கையாளும் தடவைகள்**

ஒரு குழு பந்தை ஆகக்கூடிய மூன்று தடவைகளுள் அடித்து (தடுத்தல் தவிர்ந்த) வலைக்கு மேலாக எதிரணிக்கு அனுப்பலாம்.

14.1.2 குழுவொன்று பந்தை அடித்தல் வேண்டுமென்றோ தற்செயலாகவோ தொடுவதாக இருக்கலாம்.

14.1.3 ஒரு விளையாட்டு வீரர் தொடர்ச்சியாக இருமுறை பந்தை அடிக்க முடி யாது (விதி:19.2-2 தவிர)

**14.2 ஒரே வேளையில் தொடுகை**

14.2.1 விளையாட்டு வீரர் இருவர் அல்லது மூவர் ஒரே வேளையில் பந்தைத் தொடலாம்.

14.2.2 ஒரே குழுவைச்சேர்ந்த விளையாட்டு வீரர்கள் இருவர் ஒரே வேளையில் பந்தை அடித்தல் இரு அடிகள் எனக் கருதப்படுகிறது (தடுத்தல் தவிர்ந்த) விளையாட்டு வீரர்கள் இருவர் பந்தை நெருங்கி ஒருவர் மாத்திரம் பந்தை அடித்தல் ஓர் அடி எனக் கருதப்படும் இருவர் மோதிக்கொள்ளுதல் தவறு அல்ல 14.2.3 வலைக்கு மேலே உள்ள பந்தை எதிரணியின் இரு விளையாட்டு வீரர்கள் ஒரே வேளையில் அடித்து, மீண்டும் வரும் பந்தைப் பெறும் அணியினர் மூன்றுமுறை அதனை அடிக்கலாம். அப்பந்து ஏதாவது ஒரு பக்கம் வெளியே சென்றால். அது எதிரணியின் தவறாகக் கருதப்படும் அதேபோன்று ஒரே சந்தர்ப்பத்தில் அடிக்கும் போது பந்து தங்குமாயின் அது இரட்டைத்தவறு ஆவதுடன் (விதி 13.2.3) அதன் காரணமாக மீண்டும் பணிக்க வாய்ப்பும் கொடுக்கப்படும்.

**14.3 அடிப்பதற்கு உதவி பெறல்**

விளையாட்டு வீரர் பந்தை, நெருங்குவதற்க இன்னொரு விளையாட்டு வீரரையோ வெளிப்பொருளொன்றையோ பயன்படுத்த முடியாது. எனினும் வீரர் ஒருவரால் தவறு ஒன்று ஏற்படப் போகும்போது (வலையில் உராய்தல், மத்திய கோட்டைத் தாண்டுதல்) அதனைத் தடுப்பதற்கத் தமது அணியின் வீரருக்கு உதவுதல் தவறு அல்ல.

**14.4 அடிப்பொன்றின் பண்புகள்**

14.4.1 விளையாட்டு வீரர் ஒருவர் தனது உடம்பின் எப்பாகத்தினாலும் பந்தைத் தொடலாம்.

14.4.2 பந்தை அடிக்க வேண்டும், தொடுகையுற்ற இடத்தில் பந்து தங்கலாகாது, அமுக்குதல், தூக்கிக் கொடுத்தல், தள்ளுதல்; தாங்குதல், பிடித்து எறிதல் போன்றன செய்தலாகாது. பந்து எத்திசையிலும் தெறிந்துச் செல்லலாம்.

14.4.3 உடம்பின் ஒரு பகுதியில் அல்லது பல பகுதிகளில் பந்து ஒரே சமயத்தில் பட்டுத் தெறித்தல் தவறில்லை. எனினும் அது ஓர் அசைவாக இருக்க வேண்டும்.

இவற்றைத் தவிரப் பின்வரும் சந்தர்ப்பங்களிலும் அனுமதி வழங்கப் படும்:-

அ) பந்தைத் தடுக்கும் போது வீரர் ஒருவரில் அல்லது பலரில் பல தொடுகைகள் ஒரே சமயத்தில் நடைபெறுவதால் அது ஒரு தொடுகையாகக் கருதப்படும் (விதி:19.4.1)

ஆ) குழு ஒன்றின் முதலாவது தொடுகையின் போது (19.1.2) உடம்பின் பல இடங்களில் தொடர்ந்து பட்டாலும் அது ஒரு தொடுகையாகவே கணிக்கப்படும் ஆனால் ஒரே உடல் செய்கை நிலையில் (one action)



14.5 பந்தை விளையாட்டில் ஈடுபடுத்தும்போது ஏற்படும் தவறுகள் :-

அ) நான்கு முறை அடித்தல் :-
எதிரணியினருக்கு அனுப்புமுன்னர் பந்தை ஒரு வேளையில் நான்கு முறை அடித்தல் (விதி : 14.1.1)

ஆ) அடிபதற்கு உதவுதல் :-
விளையாட்டு வீரர் ஒருவர் தமது குழுவினருக்குப் பந்தை அடிக்க உதவுதல்; அத்துடன் வெளிவாரிப் பொருளின் உதவியை அடிப்பதற்குப் பெற்றுக் கொள்ளுதல் (விதி: 14.3).

இ) தொடுகையால் தங்கிய பந்து :-
வீரர் தெளிவாகப் பந்தை அடியாமை (விதி : 14.4.2)

ஈ) இரு முறை அடித்தல் :-
வீரர் பந்தைத் தொடர்ந்து இரண்டுமுறை அடித்தல் அல்லது உடம்பின் ஏதாவதொரு பகுதியில் தொடர்ந்து இருமுறை படுதல் (விதி: 14.1.3., 14.4.3.)

## விதி 15 வலைக்கண்மையில் பந்து

**15.1 பந்து வலைக்கு (மேலால்)க் குறுக்காகச் செல்லுதல்.**

15.1.1 வலைக்கு இரு அந்தலைகளிலும் உள்ள உணர் தடிகள் இரண்டும் நீட்டிய பகுதிகளாகக் கருதப்படும். இப்பகுதியினூடாகவும் வலைக்கு மேலாக வும் கூரைக்கு (சீலிங்குக்கு)க் கீழாகவும் பந்து எதிரணியினருக்கு அனுப்பப்படும் சந்தர்ப்பங்கள் முறையானதாகும். (உரு: 5).

15.1.2 வலைக்கு வெளிப்புறத்தில் நீட்டப்பட்ட வலைக்கு நேரான தளத்திற்கு அப்பால் முழுப்பந்தும் எதிரணியினருக்குச் செல்லுமுன்னர் வீரர் பந்தை அடிக்கலாம்.

15.1.3 அதே போன்று வலைக்குக் கீழால் பந்து முற்றாக எதிரணிக்குச் சென்ற பின்னர் அது வெளிப்புறம் சென்றதாகக் கருதப்படும் (உரு: 11.3).

**15.2 பந்து வலையில்**

பணித்தல் தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் பந்து வலையின் உரிய பகுதிக்கூடாகத் தொட்டுச் செல்லலாம் (விதி: 15.1.1)

**15.3 வலையில் மோதிச் செல்லுதல்** (பணிப்பு அல்லாதபோது)

15.3.1 வலையில்பட்டு வரும் பந்தை மூன்று முறை அடிக்கலாமென்னும் விதியின் கீழ் மீண்டும் விளையாடலாம்.

15.3.2 பந்து வலையில் படுவதனால் வலை கிழிந்து அதன் ஓட்டை மூலம் பந்து சென்றால் அப்போது விளையாட்டு நிறுத்தப்பட்டு மீண்டும் பணித்த குழுவுக்கே பணிக்கச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

## *விதி 16 வலைக்கு அண்மையில் உள்ள விளையாட்டு வீரர்*

எல்லாக் குழுக்களும் தமக்குரிய மைதானப்பகுதியிலும் விளையாட்டுப் பிரதேசத்திலும் விளையாட வேண்டும்.

**16.1 விளையாடும் பகுதியும் வெளியும் (இடம்)**

16.1.1 அடித்தலைத் தடுப்பதற்காக விளையாட்டு வீரர் ஒருவர் வலைக்கு மேல் எதிர்ப்பக்கத்துக்குக் கையை நீட்ட முடியுமாக இருப்பதுடன் எதிரணிவீரர் பந்தை அடிக்கும்போதோ அதற்க முன்னரோ தடுப்போன் பந்தைத் தொடமுடியாது (விதி:19.3)

16.1.2 பந்தை அடித்தபின் வீரர் ஒருவரின் கை வலைக்கு மேலால் எதிர்ப்பக்கத் திற்குப் போக முடியுமாயினும் பந்தைத் தனது பக்கம் இருக்கும் போது அடித்திருக்க வேண்டும்.

***16.2 வலைக்குக் கீழால் எதிரணியினர் பக்கத்துக்குச் செல்லுதல்***

16.2.1 வீரர் ஒருவரின் உடம்பின் ஒரு பகுதி வலைக்குக் கீழால் எதிரணியின் பக்கத்துக்குச் செல்வது தவறன்று. எனினும் அது எதிரணி வீரருக்குக்குந்த கமாக இருக்கலாகாது.

16.2.2 எதிர்ப்பக்க விளையாட்டு மைதானத்தை தொடுதல்.

அ) எதிர்ப்பக்கத்தை ஒரு பாதத்தால் அல்லது இரண்டு பாதங்களாலும் மத்திய கோட்டை மிதித்தல் அல்லது மத்திய கோட்டுத் தளத்தில் பாதம் இருத்தல் தவறாகக் கருதப்பட மாட்டாது.

ஆ) உடம்பின் வேறு எந்தப் பகுதி மூலமாகவேனும் எதிரணியினைத் தொடுதல் தவறாகும்.
அதே போல வீரர் ஒருவர் எதிரணியின் சுதந்திர வலயத்துக்குள் செல்லலாம். ஆனால் அங்கு எதிரணி வீரருக்கு இதனால் தடங்கல் ஏற்படக்கூடாது.

**16.3 வலையைத் தொடுதல்**

16.3.1 வலையின் எந்த ஒரு பகுதியோ உணர் தடியையோ தொடலாகாது.

16.3.2 பந்தை அடித்த பின்னர் வலையின் முழு நீளத்துக்கு வெளியில் உள்ள வலையைக் கட்டும் கம்பம் அல்லது கயிறு அல்லது வேறு ஏதும் பொருட்களை விளையாட்டில் பாதிப்பை ஏற்படுத்தாது தொடலாம்.

16.3..3 பந்து வலையில் படுவதனால் வலை எதிரணி விளையாட்டு வீரர் ஒருவர் உடம்பில் முட்டுதல் தவறாகாது.
பந்து விளையாட்டில் ஈடுபடுத்தப்படாத வேளைகளில் வீரரொருவர் எதிர்ப்பக்கத்துக்குச் செல்லலாம் (விதி:12.2)

**16.4. வலைக்கருகே வீரரின் தவறு**

அ) எதிரணி வீரர் பந்தை அடிக்கும் போது அல்லது அதற்கு முன்னர் எதிரணி பந்தைத் தொடுதல். (விதி:16.1.1)

ஆ) வலைக்குக் கீழே உள்ள வெளியூடாக உடம்பின் எப்பகுதியினா லாவது எதிர்ப்பக்கத்தில் உள்ள வீரர்களுக்குத் தடங்கல் ஏற்படுத் துதல். (விதி:16.2.2)

இ) வீரர் எதிரணியின் மைதானத்தைத் தொடுதல். (விதி;16.2.2)

ஈ) எதிரணி வீரர் வலையைத் தொடுதல் வழு ஆனால் தற்செயலாக அல்லது விளையாட முனையாத போது அது வழுவாகாது.



***விதி 17 பணித்தல்***

**17.1 வரைவிலக்கணம்**

மைதானத்தின் பிற்பகுதியில் விளையாட்டு வீரர் ஒரு கையால் அல்லது புயத்தால் பணிக்கும் பிரதேசத்தில் நின்று பந்தை விளையாட்டில் ஈடுபடுத்துதல் பணித்தல் எனப்படும்

**17.2 முதற்பணிப்பு.**

17.2.1 முதலாவதிலும் ஐந்தாவதிலும் (இறுதிச் சுற்றிலும்) நாணய அனுகூலத் தின் அடிப்படையில் சந்தர்ப்பத்தைப் பெறும் அணி முதலில் பணிக்கும் (8.1)

17.2.2 ஏனைய சுற்றுக்களில் முன்னைய சுற்றில் முதற்பணிப்பைப் பெறாத அணி பணிக்கும்.

**17.3 பணிப்பு ஒழுங்குமுறை**

17.3.1 வரிசைப்படுத்தும் பத்திரத்தின் ஒழுங்கு முறைக்கேற்பப் பணித்தல் வேண்டும் (விதி: 9.2.1)

17.3-1 அ) முதலாவதாகப் பணித்த அணிக்குப் புள்ளி கிடைப்பின் பணித்த வீரரே தொடர்ந்து பணிக்க வேண்டும்.

ஆ) பணித்த அணி தவறு இழைப்பின் எதிரணிக்குப் பணிக்க வாய்ப் புக்கிட்டும். இவ்வேளை விளையாட்டு வீரர்கள் இடம் மாற வேண் டும். முன் வரிசையில் வலதில் இருக்கின்ற விளையாட்டு வீரர், பின் வரிசையின் வலப்பக்க இடத்திற்குச் சென்று பணிக்க வேண்டும்.

**17.4 பணிக்க அனுமதி வழங்குதல்.**

பணிக்கும் வீரர் கையில் பந்தை வைத்துக் கொண்டு பணித்தல் பிரதே சத்தில் நிற்கையில், குழுவாவது விளையாட்டுக்கு தயாராக இருக்கும் போது, 1வது மத்தியஸ்தர் பணிப்புக்கான சமிக்ஞையைச் செய்வார்.

**17.5 பணிக்கும்போது பின்பற்றப்பட வேண்டிய விடயங்கள்.**

17.5.1 பணிக்கப்பந்தை அடிக்கும சந்தப்பத்தில் அல்லது பணித்தலுக்காக மேலே துள்ளும் சந்தர்ப்பத்தில் பணிக்கும் வீரர் விளையாட்டு மைதானத்தின் எல்லைக் கோடுகளுக்கும் பணிப்பு வலயத்துக்கும் வெளியே செல்வது தவறாகும் ஆனால் பணித்த பின்பு இவை தவறாகாது.

17.5.2 1வது மத்தியஸ்தரது ஊதியின் சத்தம் கேட்டு 05 செக்கனுக்குள் பணிக்க வேண்டும்.

17.5.3 ஊதியின் சத்தத்திற்கு முன்னர் பணித்தால் அது ரத்துச்செய்யப்பட்டு மீண்டும் பணிக்க அனுமதிக்கப்பவர்.

17.5.4 பந்தைப் பணிப்பதற்காக ஒரு கையினால் அல்லது புயத்தினால் பந்தை அடிக்கலாம். இவ்வாறு அடிக்குமுன் பந்து மேலே போடப்பட்டோ அல்லது கையில் இருந்து நழுவ விடப்பட்டோ அது நிலத்தைத் தொடு வதற்கு முன் அடிக்க வேண்டும்.

**17.6 பணிக்க முயற்சித்தல்**

17.6.1 பணிப்பதற்காக மேலே போடப்பட்ட பத்து உடலில் படாமல் நிலம் படுதல் பணிக்க முயற்சி செய்தலாகும்.

17.6.2 அம்முயற்சிக்குப் பின் ஒருவரால் ஊதியின் ஒலி வெளிப்படுத்தப்பட்டு 03 செக்கனுக்குள் பணிக்க வேண்டும்.

17.6.3 மீண்டும் பணிக்கச் சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது.

**17.7 மறைத்தல்**

பணிக்கும அணியின் விளையாட்டு வீரர்கள், பணிப்பவரின் செய்கை யை அல்லது அப்பந்தின் போக்கை எதிரணியினருக்கு மறைக்கவோ மறைக்க முயற்சி செய்யவோ கூடாது.

17.7.1 பணிக்கும் சந்தர்ப்பத்தில் அவ்வணியின் விளையாட்டு வீரர் ஒருவர் கையைத் தூக்கினால் அல்லது உயரப் பாய்ந்தால் அல்லது அங்குமிங்கும் சென்றால் அல்லது பணித்த பந்து அவரின் தலைக்கு மேலால் சென்றால் அது தனியானமறைத்தல் எனக் கருதப்படும்.

17.7.2 இருவர் அல்லது அதற்க மேற்பட்டோர் கலந்து பணிப்பவரை எதிர ணியினருக்குத் தென்படாதவாறு மறைத்து, அம்மறைத்தலுக்கு மேலால் பந்தைப் பணித்தால் அது குழு மறைப்பு எனப்படும் (உரு 06)

**17.8 பணிப்பில் தவறுகள்**

பணிப்பவர் பின்வரும் தவறுகளைச் செய்தாலும் எதிரணியினர் தமது இட ஒழுங்கு மாறியிருந்தாலும் எதிரணிக்குப் பணிப்பு உரிமையாக் கப்படும்.

அ) பணித்தல் விதிகளை மீறுதல் (விதி:17.5)

இ) பணித்தல் விதிகளை மீறுதல் (விதி:17.6)

**17.9 பந்தைப் பணித்த பின் (விளையாட்டு இட ஒழுங்கு முறையில் தவறுகள் இல்லாதபோது)**

அ) தமது அணியின் விளையாட்டு வீரர் ஒருவரின் உடம்பில் படுதல் அல்லது வலையின் செங்குத்துக்கு அப்பால் செல்லுதல்.

ஆ) வலையில் படுதல் (விதி:15.2)

இ) மைதானத்துக்கு வெளியில் செல்லுதல் (விதி:12.4)

ஈ) தனி அல்லது குழு மறைப்புக்கு மேலால் செல்லுதல் (விதி:17.7)

*விதி.18 அறைதல்*

**18.1 வரைவிலக்கணம்**

18.1.1 பணிப்பும், தவிர்ப்பும் தவிர்ந்து எதிரணிக்குப் பந்தை அனுப்புவதற்கான எல்லாச் செயல்களும் அறைதல்களாகவே கருதப்படும்.

18.1-2 பந்து வலையின் செங்குத்தை முற்றாகக் கடப்பதால் அல்லது தடுப்போ னில் தொடுவதால் அறைதல் பூரணம் அடையும்.



**18.2 முன்வரிசை வீரரின் அறைதல்**

முன்வரிசையில் விளையாடு வீரர் எந்த உயர்த்திலுள்ள பந்தையும் அடிக்க முடியுமாயினும் அடிக்கும்போது பந்து தமது ஆகும் பிரதேசத்தில் இருக்க வேண்டும் (விதி:18.4. 'இ' தவிர)

**18.3 பின்வரிசை வீரரின் அடிக்கும் வரையறைகள்**

18.3.1 பின்வரிசை விளையாட்டு வீரர் முன்வலயத்தின் பிற்பகுதியிலிருந்து எந்த உயரத்திலுள்ள பந்தையும் அடிக்கலாம். அடிப்பதற்காகத் துள்ளும் போது அவரின் பாதம்/பாதங்கள் அறையும் கோட்டைத் தொடவோ அதனைத் தாண்டி முன் செல்லவோ கூடாது. எனினும் அடித்த பின்னர் முன்வலயத்தில் நிலம்படலாம்.

18.3.2 பின்வரிசை விளையாட்டு வீரர் முன்வலயத்தில் இருந்து கொண்டே அடித்து எதிரணிக்குப் பந்தை அனுப்ப முடிமாயினும் அடிக்கும் சந்தர்ப்பத்தில் வலையின் மேல் நாடாவைவிடக் குறைந்த உயரத்தில் பந்து முற்றாக இருக்க வேண்டும். (விதி 0.7)

**18.4 அறைதலின் போது ஏற்படும் தவறுகள்**

அ) எதிரணியினரின் பந்தை அடித்தல் (விதி:16.1.2)

ஆ) அடிக்கப்பட்ட பந்து மைதானத்திற்கு வெளியே செல்லுதல். (விதி:12.4)

இ) பின்வரிசை வீரர் ஒருவர் முன்வலயத்துக்கு வந்து வலைக்கு மேலாக உள்ள பந்தை அறைந்து எதிரணிக்கு அனுப்புதல் (விதிகள்: 18 1-2,18.3.1)

ஈ) எதிரணியின் பணிப்பொன்றை முன்வலயத்தில் இருந்து பந்து முற்றாக வலைக்குமேல் இருக்கும் போது அடித்தல்.

*விதி 19 தடுத்தல்*

**19.1 வரைவிலக்கம்**

முன்வரிசை வீரர்கள் வலைக்கு அருகில் எதிரணியினரிடம் இருந்து வரும் பந்து வலையின் மேல் நாடாவைவிட உயரமாக இருக்கும் சந்தர்ப்பதில் குந்தகட் செய்தல் தடுத்தல் எனப்படும்.

19.1.1 தடுப்பதற்கு முயற்சி செய்தல்.

பந்தைத் தொடாமல் தடுப்பதற்கான முயற்சியே தடுப்பதற்கு முயற்சி செய்தல் எனப்படுகின்றது.

19.1.2 தடுப்பு நிறைவடைதல்

தடுப்பவர் பந்தைத் தொட்டபின்னர் தடுத்தல் பூரணமடைகின்றது (உரு:8) முன்வரிசை வீரர்கள் மாத்திரமே தடுத்தலில் ஈடுபடலாம்

19.1.3 கூட்டாகத் தடுத்தல்

வீரர்கள் இருவர் அல்லது மூவர் மற்றவரை நெருங்கி ஒருமித்துக்கூட் டாகத் தடுத்தலுடன் ஒருவர் பந்தைத் தொடுதலால் தடுப்பு நிறை வடையும்.

19.2 **தடுத்தபின் குழு பந்தை அடித்தல்**

தடுக்கும் போது பந்தைத் தொடுதல் பந்தை அடிப்பதாகக் கருதப்பட மாட்டாது (விதி:14.1)

19.2.1 தடுப்புடுக்கான தொடுதலின் பின் குழுவுக்கு மூன்று முறை பந்தை அடித்து எதிரணிக்கு அனுப்பலாம்.

19.2.2 தடுப்பின் முதலாவதாக அடிப்பதைக் குழுவின் எந்த வீரரும் செய்யலாம். தடுத்த வீரனுக்கும் இது பொருந்தும்.

19.3 **எதிரணிப்பிரதேசத்தார் தடுத்தல்.**

எதிரணி வீரனுக்கு இடைஞ்சல் ஏற்படாதவாறு ஒருவரோ பலரோ தமது கைகளை வலைக்கு மேலால் செலுத்தி தடுப்பதற்கு முயற்சி செய்யலாம். எனினும் எதிரணி வீரர் பந்தை அடித்த பின்னரே தடுக்க வேண்டும்.

19.4 **தடுப்பில் தொடுகை.**

19.4.1 தடுப்போர் ஒருவர் அல்லது பலரின் தொடர்ச்சியான தொடுகை, ஒரேநிலையிலான தொடுகை எனக்கருதப்படும்.

19.4.2 இந்தத் தொடுகை உடம்பின் எப்பகுதியிலும் இடம் பெறலாம்.

19.5 **தடுப்பில் தவறுகள்.**

அ) எதிரணி வீரர் ஒருவர் அடிக்கும் போது அல்லது அதற்கு முன்னர் எதிர்ப்பக்கத்துக்குக் கையை நீட்டிப் பந்தைத் தொடுதல்.

ஆ) பின்வரிசை வீரர் ஒருவர் தடுத்தல் அல்லது தடுப்பதற்காகப் பங்குபற்றுதல் (விதி:1.2.3)

ஈ) உணர்தடிக்கு வெளியில் எதிரணியின் பந்தைத் தடுத்தல்.

உ) எதிரணியின் பணிப்பைத் தடுத்தல்.

ஊ) தடுத்தபின் பந்து மைதானத்திற்கு வெளியே செல்லல்

## விளையாட்டை இடைநிறுத்தலும் தாமதம் செய்தலும்

***விதி 20 சட்டரீதியான தடங்கள்***

20.1 **வகை**

குறுதிய இடைவேளையும் வீரர் பிரகியீடும் விளையாட்டின் சட்டரீதி யான இடை நிறுத்தலாகும்.

20.2 **சட்ட ரீதியான இடைநிறுத்த எண்ணிக்கைகள்.**

ஓர் அணி ஒரு சுற்றில் கூடிய பட்சம் குறுகிய இடைவேளை 02 உம் பிரதி யீடுகள் 06 உம் பெற்றுக் கொள்ள முடியும்.

20.3 **சட்ட ரீதியான இடைநிறுத்தம் கோருதல்.**

இத்தேவைக்காகக் குழுவின் பயிற்றுவிப்போன் அல்லது குழுத்தலைவன், பந்து விளையாட்டில் ஈடுபடுத்தப்படாதிருக்கும் சந்தர்ப்பத்திலோ அல்லது முன்னரோ கைச்சமிக்ஞை மூலம் கோருதல் வேண்டும் (உரு11 4.5)



20.4 **இடைநிறுத்தக் கோரும் ஒழுங்கு முறை:-**

ஒரு குழு குறுகிய இடைவேளைகள் ஒன்றும் அல்லது இரண்டும் வீரரைப் பிரதியிடுதலுக்கான கோரல் ஒன்றும் மீண்டும் விளையாட்டை ஆரம்பிக்காமல் அனுமதி உண்டு. ஒரு பிரதியீட்டுக்கான சந்தர்ப்பத்தில் இருவரையோ பலரையோ பிரதியீடு செய்யலாம் (விதி:20.6.2)

20.5 **குறுகிய இடைவேளை.**

20.5.1 குறுகிய இடைவேளை நேரம் 30 விநாடிகளாகும்.

20.5.2 குறுகிய இடைவேளை நேரத்தில் வீரர்கள் தமது இருக்கை அருகில் செல்லவேண்டும்.

20.6 **வீரர்களைப் பிரதியீடு செய்தல்**

20.6.1 வீரர்களைப் பிரதியீடு செய்வதற்கான நேரம், இரண்டு விளையாட்டு வீரர்கள் மாறிக் கொள்வதற்கும் புள்ளிப் பதிவுப் பத்திரத்தில் பதிந்து கொள்வதற்கும் மட்டுமே வழங்கப்படுகிறது.

20.6.2 பயிற்றுவிப்போர் ஒன்றுக்கு மேற்பட்ட பிரதியீடுகளைக் கோரின் எண்ணிக்கையையும் அறிவிக்க வேண்டும். அப்போது ஒரு சோடிக்குப் பின் அடுத்த சோடி என்ற வகையில் பிரதியீடு செய்யப்படும்.

20.6.3 கோரும்போது மாற்றத்திற்குரிய விளையாட்டு வீரர்/வீரர்கள் பயிற்றுவிப் போனுக்கு அருகில் நிற்க வேண்டும் (விதி: 6.3.3), அவ்வாறு நிற்கா விட்டால் பிரதியீட்டைச் செய்யாது விளையாட்டைத் தாமதப்படுத்திய மைக்காகக் குழுவுக்குத் தண்டனையும் வழங்கப்படும் (விதி: 1.4.3)

20.7 **பொருத்தமற்ற கோரல்**

* பந்து விளையாட்டில் ஈடுபடுத்தப்படும் போது, பணிப்புக்கான ஊதி ஊதப்படும்போது அல்லது ஊதப்பட்ட பின்னர் கோரல் (விதி:20.3)
* அதிகாரம் பெறாத வீரர் ஒருவரால் செய்யப்படும் கோரல்கள் (விதி:20.3)
* முதலாவது பிரதியீட்டின் பின் போட்டி நடைபெறுவதற்கு முன்னர் அக்குழு இன்னொரு பிரதியீட்டைக் கோருதல் (விதி:20.4)
* குறுகிய இடைவேளைகள் அல்லது பிரதியீடுகள் அனைத்தும் பெற்றுக் கொண்ட பின் மீண்டும் கோருதல் (விதி:20.2)
* எந்தவொரு பொருத்தமற்ற கோரலும் விளையாட்டைத் தாமதம் செய்யாதிருப்பின் தண்டனையின்றி நிராகரிக்கப்படும். எனினும் அதே சுற்றில் அவ்வாறான கோரல்களை மீண்டும் செய்தல் தவறாகும் (விதி:21.1. இ)

### விதி 21 விளையாட்டைத் தாமதம் செய்தல்

**21.1 தாமதம் செய்யும் வகைகள்**

ஏதாவது ஒரு குழு பொருத்தமற்ற நடத்தைகள் மூலம் விளையாட்டை மீண்டும் ஆரம்பிப்பதற்குத் தடங்கல்களை ஏற்படுத்துதல் தாமதம் செய்தல் எனப்படும். அவையாவன

அ) பிரதியீடுகளில் தாமதம் செய்தல்

ஆ) விளையாட்டை மீண்டும் ஆரம்பிக்க ஆயத்தமாகும் போது தடங்கலை நீடித்துக் கொள்ளுதல்.

இ) சட்ட முறையற்ற பிரதியீடு ஒன்றைக் கோருதல் (விதிகள் 11.2:2,11.2.3)

ஈ) அதே சுற்றில் பொருத்தமற்றுக் கோருதல் (விதி:20.7)

உ) வீரர் ஒருவர் விளையாட்டைத் தாமதப்படுத்துதல்.

**21.2 தாமதம் செய்தலுக்கான தண்டனைகள்.**

21.2.1 ஒரு சுற்றில் குழு ஒன்றினால் செய்யப்படும் முதலாவது தாமதத்துக்குத் தாமதப்படுத்தல் எச்சரிக்கை செய்யப்படும்

21.2.2 அதே சுற்றில் அதே குழுவினால் செய்யப்படும் இரண்டாவது அல்லது அதற்க மேற்பட்ட எவ்வகையான தாமதப்படுத்தலுக்கும் தாமதப்படுத்தல் தண்டனைகள் வழங்கப்படும். இதற்காக எதிரணிக்குப் பணிப்பு அல்லது புள்ளி ஒன்றை வழங்குதல்.

### விதி 22 விசேடவகை இடைநிறுத்தம்

**22.1 காயமேற்படுதல்**

22.1.1 போட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது பாரதூரமான விபத் தொன்று நிகழ்ந்தால் மத்தியஸ்தரால் உடனடியாகப் போட்டி நிறுத்தப்பட வேண்டும். பின்பு மீண்டும் அதே குழு பணிக்க வேண்டும்.

22.1.2 காயமேற்பட்ட விளையாட்டு வீரருக்குப் பதிலாகச் சட்ட முறையான அல்லது விசேட வகையான பிரதியீடு ஒன்றைச் செய்ய முடியாவிடின் (விதி:1.1.3), அவர் இயல்பான நிலையை அடை 03 நிமிடகால அவகாசம் வழங்கப்படும் அதே விளையாட்டு வீரருக்குப் போட்டியின் வேறு ஒரு சந்தர்ப்பத்தில் இந்தக் கால அவகாசம் வழங்கப்படமாட்டாது. எனினும் அவர் இயல்பான நிலையை அடையாவிட்டால் குழு பூரணமற்றது எனக் கருதப்பட வேண்டும் (விதிகள் 7.5.3,9.3)

**22.2 வெளித் தலையீடுகள்.**

போட்டி வேளையில் வெளித்தலையீடுகளால் தடங்கல்கள் ஏற்பட்டால் போட்டி நிறுத்தப்பட்டு மீண்டும் பணித்தல் மூலம் போட்டி ஆரம்பிக் கப்படும்.

**22.3 தடங்கலை நீடித்துக் கொள்ளுதல்**

எதிர்பாராத விதமாகப் போட்டியை நடாத்தி இடையூறு ஏற்படின்



ஒழுங்கமைப்பு நிர்வாகக் குழுவுடன் 1வது மத்தியஸ்தர் கலந்துரையாடி நிலைமை சுமுகமடைந்தபின் போட்டியை இயல்பாக நடாத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்

22.3.1 ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தடங்கல்கள் காரணமாகப் போட்டியை மீண்டும் ஆரம்பித்தல் 04 மணித்தியாலங்களுக்கு மேற்படாதிருப்பின்

அ) போட்டி அதே மைதானத்தில் நடைபெறுமாயின் இடை நிறுத்த வேளையில் நடைபெற்ற சுற்றின் புள்ளிகள் வீரர்கள் நிலைகள் ஆகியன அதேமாதிரியாக வைத்திருக்கப்படும். அதற்கு முந்திய சுற்றுகளின் புள்ளிகளும் மாறாமல் தொடர்ந்து இருக்கும்.

ஆ) போட்டி வேறொரு மைதானத்தில் நடைபெறுமாயின் தடங்கல் ஏற்பட்ட வேளையில் நடைபெற்ற சுற்றை ரத்துச் செய்து அதனை மீண்டும் ஆரம்பம் முதலே முன்னர் இருந்த இட ஒழுங்குக்கு அமைய ஆரம்பிக்கப்படும். முன்னைய வீரர்களின் புள்ளிகள் அவ்வாறே இருக்கும்.

22.3.2 ஒன்று அல்லது பல தடங்கல்கள் காரணமாகப் போட்டியை ஆரம்பிக்க 04 மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட தாமதம் ஏற்படுமாயின் முழுப் போட்டியையும் மீண்டும் நடத்த வேண்டும்.

### விதி 23 ஓய்வு நேரமும், மைதானத்தில் பக்க மாற்றமும்

**23.1 ஓய்வு நேரம். (இடைவேளை)**

சுற்றுகளுக்கிடையே 03 நிமிடங்கள் ஓய்வாகும். இவ்வேளை பக்கமாற் றமும், அடுத்த சுற்றுக்கான விளையாட்டு வீரர்களின் ஒழுங்கு முறை யைப் புள்ளிப்பதிவுத் தாளில் பதிதலும் இடம் பெற வேண்டும்.

**23.2 விளையாட்டு மைதானத்தில் பக்கம் மாறுதல்.**

23.2.1 முடிவெடுக்கும் (இறுதிச்) சுற்றுத் தவிர்ந்த ஏனைய எல்லாச் சுற்றுக்களின் பின்பும் குழுக்கள் விளையாட்டு மைதானத்தில் பக்கம் மாற வேண்டும் (விதி:8.1.2) ஏனைய வீரர்களும் தமது இருக்கை மாற வேண்டும்.

23.2.2 முடிவெடுக்கும் சுற்றில் ஒரு குழு 08 புள்ளிகள் பெற்றதும் குழுக்கள் உடனடியாகப் பக்கம் மாறவேண்டும். வீரர்களின் ஒழுங்கு மாறாமல் இருக்கும். மைதான மாற்றத்தில் தாமதம் ஏற்பட்டால் அதனை அறிந்த வுடன் மாற்றிக் கொள்ள வேண்டும். அச்சந்தர்ப்பத்தில் இருந்து புள்ளிகள் தொடர்ந்திருக்கும்.

வீரர் ஒருவர் உத்தியோகத்தருடன், எதிரணியுடன், பார் அல்லது தமது குழு விளையாட்டு வீரர்களுடன் முறைகேடாக நடந்து கொள்ளுதல். அந்நடத்தையின் இயல்பிற்கேற்ப நான்காக வகைப்படுத்தப்படும்.

### விதி 24 தவறான முறையில் நடந்து கொள்ளுதல்

**24.1 வகைகள்.**

24.1.1 விளையாட்டு நிலைமைகளுக்குப் பொருத்தமற்ற நடத்தை நடுவர்கள், பார்வையாளர்கள், விளையாட்டு வீரர்கள் ஆகியோர்களு

டன் வாதிடுதல், அச்சுறுத்துதல், விளையாட்டினை வேண்டுமென்றே தாமதப்படுத்துதல்.

24.1.2 பண்பற்ற நடத்தை:
வெறுக்கத்தக்க, இழிவுபடுத்தவல்ல செயல்களைச் செய்தல்

24.1.3 ஆக்கிரமிப்பு முறையான நடத்தை:
தனிப்பட்ட ஆளுமைக்குப் பங்கம் ஏற்படக்கூடிய முறையில் ஏளனம் செய்தல்' கலகம் விளையக் காரணமாதல்

24.1.4 சண்டை, சச்சரவுகளுக்கு வழிகோலுதல், தாக்குதல் அல்லது அவ்வாறான ஒன்றுக்கு வழி கோலுதல்.

## 24.2 தண்டனை

தவறான நடத்தையின் தன்மைகேற்பப் 1வது மத்தியஸ்தரின் தீர்மானத்தின்படி தண்டனைகள் விதிக்கப்படும்.

24.2.1 விளையாட்டு வீரருக்கு ஒவ்வாத நடத்தைகளுக்கு எச்சரிக்கை செய்தல். தண்டனை வழங்காமல் அதே சுற்றில் இரண்டாம் முறை செய்யலாகாது என எச்சரித்தல். இதுவும் புள்ளிப் பதிவுத்தாளில் பதியப்படும்.

24.2.3 வெளியேற்றுதல்:
பண்பற்ற நடத்தையை மீண்டும் செய்தால் அதற்கான தண்டனை வெளியேற்றுதலாகும். அச்சுற்றின் எஞ்சிய பகுதியில் விளையாடுவதற்கு இடமளிக்காமல் மைதானத்திலிருந்து வெளியேற்றப்படுவார். மேலதிக விளையாட்டு வீரராயின் அவர் விளையாட்டில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்.

24.2.4 விளையாடுவதற்குத் தகுதியற்றவராக்குதல்:
ஆக்கிரமிப்பு முறையான நடத்தைக்கு அல்லது மோதலுக்கு/கலகத்துக்கு வழிகோலுவதனால் விளையாட்டு வீரர் அல்லது குழுவின் வேறு உறுப்பினர் மைதானத்தில் இருந்தும் இருக்கையில் இருந்தும் நீக்கப்பட்டு முழுப்போட்டியில் விளையாடுவதற்கும் தகுதியற்றவராக்கப்படுவர்

## 24.3 தண்டனை வழங்கும் முறை:

ஒரே ஆள் அதே சுற்றில் தவறான நடத்தைகளை மீண்டும் மீண்டும் செய்வாராயின் தண்டனையைக் கூட்டுவது தொடர்பாகத் தண்டனை வழங்கும் முறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது (உரு:9) ஆக்கிரமிப்பு முறையான நடத்தைக்கு அல்லது கலகம் ஒன்றுக்கு அடி கோலுவதனால் விளையாடுவதற்குத் தகுதியற்றவராக்கும் போதும், முன்னர் வழங்கப்பட்ட தண்டனைகள் கருத்தில் கொள்ளப்பட மாட்டா.

## 24.4 போட்டிக்கு முன்னரும் போட்டிச்சுற்றுக்களுக்கு இடையிலும் முறைகேடாக நடத்தல்

போட்டிக்கு முன்னரும் போட்டிச் சுற்றுக்களுக்கு இடையிலும் செய்யப்படும் எவ்வகையான தவறான நடத்தைக்கும் விதி 24.2 இன் படி தண்டனை வழங்கப்படுவதுடன் அது பின்னைய சுற்றுடன் சேர்த்துக்கொள்ளவும்படும்.



# மத்தியஸ்தர்களும் அவர்களது கடமைகளும் உத்தியோகபூர்வ சமிக்ஞைகளும்

## *விதி 25 மத்தியஸ்தர் சபையும் மத்தியஸ்தம் செய்யும் முறையும்*

### 25.1 உள்ளடக்கம்.

போட்டியொன்றை மத்தியஸ்தம் செய்வதற்குப் பின்வருவோர் மத்தியஸ்தர் சபையில் உள்ளடங்குவர்:
1வது மத்தியஸ்தர்
இரண்டாம் மத்தியஸ்தர்,
புள்ளி பதிவோன்,
கோட்டுக் காவலர் இருவர்/நால்வர்
இவர்கள் நிலைகொள்ளல் உரு 10 இல் காட்டப்பட்டுள்ளன.

### 25.2 மத்தியஸ்தம் செய்யும் முறை

25.2.1 1வது மத்தியஸ்தரும் இரண்டாம் மத்தியஸ்தரும் போட்டி நடைபெறும் போது ஊதியை ஊதலாம்.

அ) 1வது மத்தியஸ்தர் பந்தைப் பணிப்பதற்கான சமிக்ஞையைச் செய்ய வேண்டும்.

ஆ) 1வது இரண்டாவது மத்தியஸ்தர் இருவரும் விளையாட்டை இடைநிறுத்தம் செய்யும் போது தவறை விளங்கிக் கொள்ளச் சமிக்ஞையும் செய்ய வேண்டும்.

25.2.2 போட்டியை இடைநிறுத்தம் செய்ய அக்குழுவின் வேண்டுதலை ஏற்க அல்லது நிராகரிக்க அவர்கள் ஊதியை ஊத வேண்டும்.

25.2.3 விளையாட்டை நிறுத்துவதற்காக மத்தியஸ்தர் ஊதி ஊதப்பட்டவுடன் உத்தியோக பூர்வவக் கைச்சமிக்ஞை செய்யப்பட வேண்டும் (விதி:30)

அ) நிகழ்ந்த தவறின் இயல்பு,

ஆ) தவறு செய்த விளையாட்டு வீரர்,

இ) பணிப்புச் செய்ய வேண்டிய குழு.

## *விதி 26 பிரதம மத்தியஸ்தர்*

### 26.1 இடம்

26.1.1 பிரதம மத்தியஸ்தர் வலையின் ஓர் அந்தலையில் மத்தியஸ்த ஆசனத்தில் அமர்ந்து தமது கருமத்தை ஆற்ற வேண்டும். அவரின் பார்வைமட்டம் வலையின் மேல் நாடாவில் இருந்து 50 சென்றிமீற்றராவது உயரமானதாக இருக்க வேண்டும்.

### 26.2 அதிகாரங்கள்.

இவர் ஆரம்பம் முதல் இறுதிவரை போட்டியைக் கட்டுப்படுத்துகின்றார். மத்தியஸ்தக்குழு, இரு அணியினர் ஆகியோர் இவ்ரின் அதிகாரத்துக்குக்

கட்டுப்பட்டவர்களாவர். போட்டி வேளையில் இவரது முடிவே இறுதியானது. ஏனையவர்களை மேவிச் செல்லவும் இவருக்கு அதிகாரம் உண்டு. அத்துடன் யாராவது தமது கடமைகளைச் சரியாக நிறைவேற்ற வில்லை எனக் கருதின் அவரை நீக்கி வேறு ஒருவரைச் சேர்க்க இவருக்கு அதிகாரமுண்டு.

26.2.2 பந்து சேகரிப்போரும் இவரது கட்டுப்பாட்டுக்குள் அடங்குவர்.

26.2.3 போட்டி தொடர்பாக எழும் எந்தவொரு விடயத்திலும் முடிவெடுத்தல் விதியில் இல்லாதவை தொடர்பாகவும் முடிவு எடுக்கலாம்.

26.2.4 இவரின் முடிவுபற்றிப்பேச முடியாது எனினும் போட்டித் தலைவரின் வேண்டுகோளின் பேரில், அவர், தாம் எடுத்த முடிவு சட்டத்துடன் பொருந்துகின்ற முறையை விளக்க வேண்டும்.

இவ்விளக்கம் தொடர்பாகத் தலைவர் இணக்கம் காணணாத விடத்துப் போட்டி முடிவடைந்தபின் அந்த எதிர்ப்பைப் புள்ளிப் பதிவுத் தாளில் குறிப்பதற்கு அனுமதி கோரினால் அதற்கு இடமளிக்க வேண்டும் (விதிகள்:6.2-2 அ,க. 2-3).

26.2.5 போட்டி நடைபெறும் போதும் அதற்கு முன்னரும் கடமைகள்

அ) விளையாட்டுப் பிரதேசம், பந்து, ஏனைய உபகரணங்கள் யாவற்றையும் பரிசோதிக்க வேண்டும்.

ஆ) குழுக்களின் தலைவர்களை அழைத்து நாணயத்தைச் சுண்டி அனுகூலத்தைப் பார்க்க வேண்டும்.

இ) குழுக்களின் ஆயத்தமாதல் (Warm up) நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்த வேண்டும்.

26.3.2 போட்டி நடைபெறும் போது அவர்க்குரிய கடமைகளாவன:

அ) தவறான நடத்தை, தாமதம் செய்தல் என்பவற்றிற்குத் தண்டனை வழங்குதல்

ஆ) பின்வரும் முடிவுகளை எடுத்தல்:

பணிப்போனின் தவறுகள், தடுக்கும் விளையாட்டு ஒழுங்கு முறையில் உள்ள தவறுகள், மறைத்தல் தொடர்பான தவறுகள்.

பந்தை விளையாட்டில் ஈடுபடுத்தும் போது ஏற்படும் தவறுகள்

வலையின் மேற்பகுதியிலும் அதற்கு மேலும் இடம் பெறும் தவறுகள்.

## *விதி 27 இரண்டாம் மத்தியஸ்தர்*

### 27.1 இடம்

முதலாம் மத்தியஸ்தருக்கு எதிரே முகம் நோக்கியவண்ணம் விளையாட்டு மைதானத்தின் கம்பங்களுக்கு வெளியே நிற்க வேண்டும் (உரு10)

### 27.2 அதிகாரங்கள்

27.2.1 1வது மத்தியஸ்தருடன் உதவியாளராகக் கடமை புரிவதுடன் தமக்குரிய வரையறைகளுக்குட்பட்டு முடிவுகளையும் வழங்கலாம் (விதி:27.3)



1வது மத்தியஸ்தர் தமது பணியைத் தொடரமுடியாத வேளைகளில் அவரின் பணிகளைப் புரியலாம்.

27.2.2 இவர் தனக்குரித்தல்லாத முடிவுகளைச் சமிக்ஞை மூலம் 1வது மத்தியஸ்தருக்குக் காட்டலாம். ஆனால் கட்டாயப்படுத்த முடியாது.

27.2.3 புள்ளி பதிவோனின் பதிவுகளை மேற்பார்வை செய்யதல்.

27.2.4 இருக்கையில் அமர்ந்துள்ள விளையாட்டு வீரர்களை அவதானித்து அவர்களின் தவறான நடத்தையிட்டு 1வது மத்தியஸ்தருக்கு அறிவிக்கவும் வேண்டும்.

27.2.5 போட்டியை இடைநிறுத்தம் செய்ய அனுமதி வழங்கவும் அதற்கான கால எல்லையைக் கட்டுப்படுத்தவும் பொருத்தமற்ற கோரிக்கைகளை நிராகரிக்கவும் அவருக்கு அதிகாரம் உண்டு.

27.2.6 குழுக்கள் இரண்டும் பெற்றுக்கொள்ளும் ஓய்வையும் பிரதியீடுகளின் எண்ணிக்கையையும் கட்டுப்படுத்த வேண்டியதுடன் இரண்டாவது குறுகிய ஓய்வு. 5வது, 6வது பிரதியீடுகள் தொடர்பாகப் பிரதம மத்தியஸ்தருக்கும் உரிய பயிற்றுவிப்போனுக்கும் அறிவிக்க வேண்டும்.

27.2.7 விளையாட்டு வீரர் ஒருவருக்குக் காயம் ஏற்படின் பிதியீட்டுக்காக அல்லது இயல்பு நிலையை அடைவதற்குரிய நேரம் வழங்கப்பட வேண்டும் (விதிகள்:11.3,22.1-3)

27.2.8 விளையாட்டு மைதானத்தின் மேற்பரப்பைக் குறிப்பாக முன்வலயத்தை - பரிசோதித்தல், போட்டி வேளையில் பந்தின் நிறையைப் பார்த்தல் என்பன இவரது கடமையாகும்.

### 27.3 பொறுப்புக்கள்.

27.3.1 ஒவ்வொரு சுற்றின் ஆரம்பத்திலும் முடிவெடுக்கும் சுற்றிலும் விளையாட்டு மைதானம் மாற்றப்பட்ட பின்னரும். தேவைப்படும் போது, விளையாட்டு வீரர்களின் இடஒழுங்கு முறை வரிசைப்படுத்தும் பத்திரத்திற்கு அமைவாக இருக்கின்றதா எனப் பரிசீலித்தல்.

27.3.2 போட்டி நடைபெறும் போது இரண்டாம் மத்தியஸ்தர் ஊதியை ஊதிச் சமிக்ஞை வழங்கக்கூடிய சந்தர்ப்பங்கள்:

அ) பணிப்பைப் பெறும் குழுவினரின் ஒழுங்கற்ற நிலை கொள்ளல் (விதி:10.3.1)

ஆ) உணர்தடியையும் வலையின் கீழ்ப்பகுதியையும் தமது பக்க விளையாட்டு வீரர் ஒருவர் தொடுதல் (விதி: 16.3.1).

இ) எதிரணியினரைத் தொடுதலும் வலைக்குக் கீழால் எதிர்ப்பக்கத்துக்குச் செல்லுதலும் (விதிகள் 16.2 1,16.2.2)

ஈ) பின்வரிசை விளையாட்டு வீரர்களின் அறைதல், தடுத்தலில் உள்ள தவறுகள் (விதிகள்:18.4 இ, 19.5.2)

உ) தனது பக்கத்தின் உணர் தடியில் பந்து படுதல் அல்லது அதற்கு வெளியே செல்லுதல் (12.4)

ஊ) வெளிப்பொருள் ஒன்றுடன் பந்து மோதுதல் (விதி:12.4)

## *விதி 28 புள்ளி பதிவோன்*

**28.1 இடம்**

1வது மத்தியஸ்தரைப் பார்த்தவண்ணம் அவருக்கு எதிரே புள்ளி பதிவோனுடைய மேசைக்கருகே அமர வேண்டும்.

**28.2 பொறுப்புக்கள்**

சட்ட முறையாகப் புள்ளிப் பதிவுத்தாளைக் கையாளல்:
இரண்டாம் மத்தியஸ்தருடன் தொடர்பு கொள்ளல்

28.2.1 போட்டியும் போட்டிச் சுற்றுக்களும் ஆரம்பிக்கும் முன்னர்

- அ) போட்டி விபரம், குழுக்கள், விளையாட்டு வீரர்களின் பெயர்ப் பட்டியல்கள் என்பன தேவைக்கேற்றவாறு ஏற்றுக்கொள்ளப் பட்ட நடைமுறைகளுக்கு அமைய ஆவணப்படுத்தப்பட வேண்டியதுடன் தலைவர்களதும் பயிற்றுவிப்போர்களதும் கையொப் பங்களையும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.
- ஆ) இரண்டு குழுக்களதும் முதலாவது வீரர்களின் ஒழுங்கு முறையை வரிசைப்படுத்தும் பத்திரத்துக்கு இயைபுடையதாகப் பதிய வேண்டியதுடன் குறித்த நேரத்தில் இவ்வட்டவணை தாமதப் படின் அதனை உடனே இரண்டாம் மத்தியஸ்தருக்கு அறிக்விக் கவும் வேண்டும். மத்தியஸ்தர்கள் தவிர்ந்த வேறு எவருக்கும் அவ்வரிசைப்படுத்தும் பத்திரத்தைக் காட்டலாகாது.

28.2.2 போட்டி நடைபெறும்போது புள்ளியிடுவோர்.

- அ) புள்ளிகளைப் பதிவதுடன் புள்ளிப் பலகையையும் சரிபார்க்க வேண்டும்.
- ஆ) பணிக்கும் ஒழுங்கைக் கட்டுப்படுத்தல் ஏதும் மாற்றங்கள் ஏற்படின் பணித்தவுடன் விரைவாக மத்தியஸ்தர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.
- இ) குறுகிய ஓய்வுகளையும் பிரதியீடுகளையும் பதிவதுடன் அவ்விப ரங்களை இரண்டாம் மத்தியஸ்தருக்கு அறிவித்தல்.
- ஈ) ஒழுங்கு முறைக்கு மாறாகக் கோரப்படும் இடைநிறுத்தங்கள் பற்றி மத்தியஸ்தர்களுக்கு அறிவிக்கவேண்டும்.
- உ) போட்டிச்சுற்று முடிவடைந்த பின்னரும் முடிவெடுக்கும் சுற்றில் 08 புள்ளிகள் பெற்ற பின்னரும் உடனடியாக நடுவர்களுக்கு அதுபற்றி அறிவிக்க வேண்டும்.

28.2.3 போட்டி முடிவடைந்தபின் புள்ளி பதிவோர்.

- அ) இறுதி முடிவுகளை அறிவிக்க வேண்டும்.
- ஆ) புள்ளிப் பதிவுப் தாளில் கையொப்பமட்டுப் பின் குழுக்களின் தலைவர்களையும் நடுவர்களையும் கொண்டு கையொப்பமிடச் செய்ய வேண்டும்.
- இ) ஆட்சேபனைகள் இருப்பின் குழுத்தலைவர் தனது ஆட்சேபனை யைப் புள்ளிப் பதிவுத் தாளில் பதிய இடமளிக்க வேண்டும்.



## *விதி 29 கோட்டுக் காவலர்கள்*

**29.1 இடம்**

29.1.1 சர்வதேசப் போட்டி ஒன்றின்போது கோட்டுக் காவலர் நால்வர் கடமையாற்ற வேண்டும். நீட்டப்பட்டதும் தனக்குரியதுமான கோட்டுக்கு நேராக அதன் முன் 1-3 மீற்றர் தூரத்தில் நிற்க வேண்டும். பின்பக்கக் கோடு பணித்தல் பிரதேசத்துக்கு அண்மையிலுள்ள முடிவிடத்தில் இருந்தும் பக்கக்கோடுகளுக்கு எதிரான இரண்டு முடிவிடங்கள் வரை யும் அமைந்ததாகும். (உரு10)

29.1.2 கோட்டுக்காலவர் இருவராயின் பணிப்பு வலயத்தைச் சேராத முடிவிடங் களில் 1-2 மீற்றர் தூரத்தில் எதிர் எதிராக நிற்க வேண்டும். இதில் ஒவ்வொருவரும் தமக்குரிய பகுதியின் பின்பக்கக் கோட்டையும் பக்கக் கோட்டையும் கவனித்தல் வேண்டும். (உரு. 10)

**29.2 பொறுப்புக்கள்**

29.2.1 கோட்டுக்காவலர் தமது சமிக்ஞைகளைக் கொடி (செ.மீற்றர் 30 x 30) மூலம் வழங்குவர்.

- அ) தமக்குரிய கோட்டில்/கோடுகளின் உட்பகுதியில் அல்லது வெளிப்பகுதியில் விழும் பந்துகள்.
- ஆ) பந்தைப் பெறும் குழுவினரால் தொடப்பட்டு வெளிச்சென்ற பந்துகள்.
- இ) பந்து வலைக்கு வெளியே செல்வதையும் உணர்தடியைத் தொட் டுச் செல்வதையும் குறித்துச் சமிக்ஞைகள் செய்ய வேண்டும் (விதி:15.1.1) பந்திற்கு மிக அண்மையில் உள்ள கோட்டுக் காவலனுக்கே இது பொறுப்பாகும்.
- ஈ) பணிப்பவரின் கால்களால் ஏற்படும் தவறுகள் பற்றிப் பின்கோட் டுக் காவலன் சமிக்ஞை வழங்க வேண்டும் (விதி:17.5.1) 29.2.2) 1வது மத்தியஸ்தரின் வேண்டுகோளின் பேரில் கோட்டுக் காவலர் தமது சமிக்ஞைகளை மீண்டும் காட்ட வேண்டும்.

## *விதி 30 உத்தியோகபூர்வ கைச்சமிக்ஞைகள்*

**30.1 மத்தியஸ்தர்களின் கைச்சமிக்ஞைகள் (உரு. 11)**

மத்தியஸ்தர்களும் கோட்டுக் காவலர்களும் உத்தியோகபூர்வ கைச்சமிக் ஞைகளையும், தவறுகளையும், இடைநிறுத்தல் அனுமதியை வழங்கவும், பின்வரும் முறையில் சமிக்ஞை வழங்க வேண்டும்.

30.1.1 சமிக்ஞைகள் குறுகிய நேரத்துக்குக் காட்டப்பட வேண்டும் ஒரு கையால் சமிக்ஞை செய்யும் போது தவறு செய்த அல்லது கோரிக்கை செய்த குழு வின் பக்கத்துக்கையைப் பயன்படுத்த வேண்டும்.

30.1.2 தவறு செய்த விளையாட்டு வீரரை அல்லது கோரிக்கை விடுத்த குழுவை மத்தியஸ்தர் காட்ட வேண்டும்.





30.1.3 பணிக்கும் பக்கம் கையை நீட்டி மத்தியஸ்தர் தனது சமிக்ஞையை நிறைவு செய்யலாம்.

**30.2 கோட்டுக் காவலர் கொடிகள் மூலம் வழங்கும் சமிக்ஞைகள்**






கோட்டுக் காவலர் உத்தியோகபூர்வக் கொடிகள் மூலம் தவறின் இயல் பைக் சமிக்ஞை மூலம் குறுகிய நேரத்துக்குக் காட்டவும் வேண்டும்.



## மத்தியஸ்தர்களின் உத்தியோக பூர்வ சமிக்ஞைகள்

சமிக்ஞை காட்ட வேண்டிய சந்தர்ப்பம் முதலாம் கூட்டிலும், இரண்டாம் கூட்டில் உள்ள 1 ம் 2 ம் இலக்கங்கள் முறையே முதலாம் இரண்டாம் மத்தியஸ்தர்களையும், அவர்கள் காட்டும் சமிக்ஞைகளையும் குறிக்கின்றது.

| | | |
|---|---|---|
| 1. பந்தைப் பணிக்கும் மாறு பணித்தல் (விதி 17.4) | பந்து பணிக்கும் திசைக்குக்கையைக் காட்டுதல் | 1  |
| 2. பணிக்கும் வாய்ப் பெற்ற பக்கம் (விதி 17.3,25.2,3) | பணிக்கும் அணியின் பக்கத் திற்கு கையை நீட்டுதல் | 1,2  |
| 3. பக்கம் மாறுதல் (விதி 23,2) | இரு கைகளையும் முன் பின் பக்கங்களுக்குத் திருப்பி உடம்பைச் சுற்றி கையைச் சுழற்றுதல் | 1,2  |
| 4. குறுகிய ஓய்வு (விதி 20.3) | ஒரு கையின் விரல்களை செங்குத்தாக மற்றக் கை யின் உள்ளங்கையில் வைத்தல் | 1,2  |
| 5. பிரதியீடு (விதி 20.3) | கையை முன்பக்கமாக மடித்து வைத்து ஒருகையைச் சுற்றி மற்றக் கையைச் சுழற்றல் | 1,2  |
| 6. தவறான செய்கைக்கு எச்சரிக்கை அல்லது தண்டனை (விதி 24.2.1- 24.2.2) | எச்சரிக்கை, தண்டனைகளுக் காக முறையே மஞ்சல் சிவப்பு அட்டைகளைக் காட்டுதல் | 1  |
| 7. மைதானத்திலிந்து வெளியேற்றல் (விதி 24.23) | இதற்காக இரு அட்டைகளையும் ஒரே நேரத்தில் காட்டுதல் | 1  |
| 8. ஆட்டத்திற்கு தகுதி இல்லை என அறி- வித்தல்(விதி 24.2,4) | இரு அட்டைகளையும் வேறு வேறாகக் காட்டுதல். | 1  |



| | | |
|---|---|---|
| 9. போட்டிச் சுற்று, அல்லது போட்டி நிறைவடைதல் (விதி 7,1,7,2) | விரல்களை விரித்தவாறு கைகளை கத்தரிக்கோலின் வடிவில் (X) நெஞ்சின் மீது வைத்தல் | 1,2  |
| 10. பணிக்ம் போது பந்து கையில் தங்கினால் (விதி 17.5.4) | உள்ளங்கையை மேல் நோக்கிய வண்ணம் நீட்டி சிறிது மேலே உயர்த்துதல் | 1  |
| 11. பணித்தலைத் தாமதித்தல் (விதி17.5,2,17.6,2) | உள்ளங்கையை முன் பக்கம் திருப்பி ஐந்து விரல்களையும் விரித்துக்காட்டல். | 1  |
| 12. மறைத்தல் அல்லது தடுப்பதில் தவறு (விதி 19.5,17.7) | உள்ளங்கைகள் முன்னே பார்த்த வண்ணம் கைகளை செங்குத்தாக மேலே உயர்துதல் | 1,2  |
| 13. பிழையாக நிலைக் கொள்ளல் அல்லது நிலைமாறுவதில் தவறு (விதி 20.3,10.4) | சுட்டு விரலினால் வில் போன்ற வரையைக்காட்டல் | 1,2  |
| 14. பந்துமைதானத்துள் விழுதல் (விதி 12,3) | கைப்புயத்தையும் விரல்களையும் நிலத்தை நோக்கிக்காட்டுதல் | 1,2  |
| 15. பந்த மைதானத்திற்கு வெளியே விழுதல் (விதி 12,4) | உள்ளங்கைகள் உடலை நோக்கி இருக்கும் வண்ணம் வைத்து உடலை நோக்கி மடித்தல் | 1,2  |
| 16. பந்து தங்குதல் (விதி 14.5ஈ) | உள்ளங்கையை மேல் நோக்கி மடித்து மேலும் கீழும் அசைத்தல் | 1,2  |
| 17. இரு தொடுகைகள் (விதி 14,5,27) | உள்ளங்கையை உட் பக்கம் திருப்பி இரு விரல்களை விரித்துக் காட்டுதல் | 1,2  |
| 18. நான்கு முறை அடித்தல் விதி 14,5 அ) | உள்ளங்கையை உட்பக்கம் திருப்பி நான்கு விரல்களையும் விரித்துக் காட்டுதல் | 1,2  |

| | | |
|---|---|---|
| 19. விதிக்கு முரணான அடி (விதி 14,5 ஆ) | உள்ளங்கை நிமிர்ந்த வண்ணம் இடுப்பின் அருகில் வைத்தி ருந்து கீழ் நோக்கி அசைத்தல் | 1,2  |
| 20. விளையாட்டு வீரர் அல்லது பணித்த பந்து வலையைத் தொடல் விதி 16.4 ஈ, 17.9 ஆ) | தவறுக்கொப்ப வலையின் பக்கத்தையோ மேல் பட்டியையோ தொடுதல். | 1,2  |
| 21. வலையின் உயரத்திற்கு மேலே எதிர் பக்கத்திற்கு அண்மித்தல் (விதி 16.4 அ) | உள்ளங்கையைக் கவிழ்த்து முழங்கையை மடித்து முழங்கைக்கு கீழ்பட்டகையை வலைக்கு கிடையாகப் பிடித்துக் காட்டல் | 1  |
| 22. பின்வரிசை வீரர்களி னாலோ, எதிர்த்தரப்பு பணித்தலை அறையும் போதோ தவறு நிகழ்தல் (விதி 18.4.இ,ஈ) | மேல்நேரக்கி உயர்த்தி முழங்கையை மடித்து முழங்கையில் கீழ்ப்பகுதியை முன் பக்கமாக தாழ்த்தல். | 1,2  |
| 23. எதிரணியின்மைதா னத்தைத் தொடுதல் (விதி 16.2,2) (விதி 15,1.3) | மத்திய கோட்டை விரலால் சுட்டிக் காட்டுதல் | 1,2  |
| **24.** இரட்டைத் தவறுகளுக் காக மீண்டும் பணித்தல் (விதி 13.2.3) 14.2.3) | இரண்டு பெருவிரல்களையும் செங்குத்தாக மேலே **உயர்த்துதல்** | 1  |
| 25. பந்துடனான் தொகை | ஒரு **கையினை** மேலே தூக்கிமு **கத்திற்கு முன்**பாக வளைத்து மறு**கையின் உள்**ளங்கையை அதற்கு **செங்குத்தாக** வைத்து உயர்த்துதல் | 1,2  |
| 26. தாமதத்திற்கான எச்ச ரிக்கையும் தண்டனையும் (விதி 21.2.1) (விதி 21.2.2) | ஒருகையில் மஞ்சல் அல்லது, சிவப்பு மட்டையை எடுத்து மறுகையை மேலே தூக்கி அதன் மணிகட்டின் மீது வைத்தல். | 1  |



## கோடு காட்டுபவர்களது சமிக்ஞைகள்


| | | |
|---|---|---|
| 1) பந்துமைதானத்துள் விழுதல் (விதி 12.3) | கொடியை **மைதானத்தை** நோக்**கிக் கீழே காட்**டல் |  |
| 2) பந்து வெளியே விழுதல் (விதி 12.4) | **கொடியை** செங்குத்தாக உயர்**த்து**தல் |  |
| 3) பந்தின் தொடுகை (விதி 29.2.1 ஆ) | ஒரு கையினால் தூக்கப்பட்ட கொடியின் மேற்பகுதியை மறுகையின் உள்ளங்கையி -னால் தொடல் |  |
| 4) பந்து செல்ல வேண்டிய பகுதிக்கு வெளியே செல்லுதல் அல்லது பணிப்பவரின் பாதத் தவறு (விதி 12.4/17 5.1) | தலைக்கு மேலாக கொடியைத் தூக்கி இருபுறமும் கொடியை அசைத்தல் தவறுக்கேற்ப உணர்தடியை அல்லது பின் கோட்டைச் சுட்டிக் காட்டல் |  |
| 5) தீர்மானத்தின் தெளிவின்மை | இரு கைகளையும் கத்தரி போல் நெஞ்சில் வைத்தல் |  |

**ஆசிரியரின் பிற நூல்கள் :-**

1. **எங்களுக்கும் காலம் வரும் - சிறுகதைத் தொகுப்பு**
2. **'தமிழ் திரும்பிப்பார்'**
3. **'தீ' 77**
4. **ஓடி விளையாடு பாப்பா, பாகம் I**
5. **'வொலிபோல்'**
6. **ஓடி விளையாடு பாப்பா, பாகம் II**
7. **மெய்வல்லுனர் விளையாட்டுக்கள்.**

# விளையாடும் பிரதேசம்

உரு-1





சர்வதேச, ஒலிம்பிக் மட்ட போட்டிகளில் சுதந்திர வலயம் ஆகக் குறைந்தது பக்கக் கோட்டில் இருந்து 6 m உம், பின் கோட்டிலிருந்து 9 m உம் ஆக அமைதல் வேண்டும் (விதி இல. 1.1.2)




# விளையாட்டு மைதானம்

உரு-2




# வலையினதும் கம்பத்தினதும் அமைப்பு

உரு-3





| | ஆண் | பெண் |
|---|---|---|
| 17 வ. கீழ் | 2.387மீ | - 2.184மீ |
| 15 வ. கீழ் | 2.286மீ | - 2.133மீ |







## வீரர்கள் நிலை கொள்ளும் முறை

### முன்வரிசை வீரர்களும் அதற்குப் பொருத்தமான பின் வரிசை வீரர்களும் நிலை கொள்ளல்




### ஒரு வரிசையிலேயே நிற்கும் வீரர்கள் நிலைகொள்ளல்





C = Centre player
மத்திய வீரர்

R = Right player
வலது புற வீரர்

L = Left player
இடது புற வீரர்


உரு : 04

## வலையின் செங்குத்துத் தளத்தைப் பந்து குறுக்கறுத்தல்





உரு : 05

## கூட்டாகத் திரையிடல் (மறைத்தல்)





உரு : 06






உரு : 07

## தடுத்தல் முழுமையடைதல் (BLOCK)




உரு : 08


## ஒழுங்கீனங்களுக்கான தண்டனையைக் காட்டும் அட்டவணை

| வகை | தடவை | தண்டனை | காட்டப்பட வேண்டிய அட்டை | விளைவு |
|---|---|---|---|---|
| விளையாட்டு வீரர் மனப்பாங்கிற்கு பொருத்தமற்ற நடத்தை | 1வது | எச்சரிக்கை | மஞ்சல் | தவிர்த்துக் கொள்ளல் |
| | 2வது | தண்டனை | சிகப்பு | எதிர்த்தரப்பினருக்குப் புள்ளி அல்லது பணிப்பு |
| | 3வது | வெளியேற்றல் | இரண்டும் இணைத்து | ஒரு சுற்றுக்கு மைதானத்தை விட்டு வெளியேற்றல் |
| முரட்டுத் தனமான நடத்தை | 1வது | தண்டனை | சிகப்பு | எதிர்த்தரப்பினருக்குப் புள்ளி அல்லது பணிப்பு |
| | 2வது | வெளியேற்றல் | இரண்டும் இணைத்து | ஒரு சுற்றுக்கு மைதானத்தை விட்டு வெளியேற்றல் |
| முறையற்ற நடத்தை ஆக்ரோசமான நடத்தை | 1வது | விளையாடுவதற்குத் தகுதியற்றவராக்குதல் | இரண்டையும் தனித்தனியாக | முழு விளையாட்டிற்கும் மைதானத்திற்கும், அமர்விடத்திற்கும் வெளியே அனுப்புதல் |

உரு : 09



## மத்தியஸ்தர்குழுவும் அவர்களது உதவியாளர்களும் நிலைகொள்ளும் முறை




R1 = First referee - முதலாம் மத்தியஸ்தர்
R2 = Second referee - இரண்டாம் மத்தியஸ்தர்
S = Scorer - புள்ளி பதிவாளர்
L = Linesmen - கோட்டுக் காவலர்கள்
O = Ball retrievers - பந்து பொறுக்குபவர்கள்
Floor moppers - மைதானம் துப்பரவு செய்வோர்

உரு : 10

## ஆண்டு 10

*10 பாட வேளைகள் (05 போதனைமுறை, 05 செய்முறை)*

போதனை முறை (Theory) 05 பாடவேளைகள்

- சர்வதேச, தேசிய ரீதியான வொலிபோல் விளையாட்டின் ஆரம்பம், பரம்பல், அமைப்புக்கள், கட்டுப்பாட்டுச் சபை போன்ற விபரங்கள் (01 பாடவேளை
- திறன்கள் தொடர்பான விளக்கங்களும் வகைப்படுத்தலும் (01 பாடவேளை)
- பணித்தல் (Service)
- பந்தைப் பெறுதல் (Reciving or Reception)
- பந்தை உயர்த்துதல் (Setting)
- அறைதல் (Spike)
- தடுத்தல் (Block)
- மைதானத்தைக்காத்தல் (Court Defend)
- விதி இல......01,...02,...03,.... (01 பாடவேளை)
- விதி இல.....04,....05,...06,...07,...08...(01 பாடவேளை)
- விதி இல....09,10,11,12,13,14, (01 பாடவேளை)

செய்முறை (Practicals) 05 பாடவேளைகள்

**1. கீழ் கை அடி (under Hand Pass) 02 பாட வேளைகள்**

**செயற்பாடு -01 (01 ஆம் பாடவேளை)**

**படிமுறை 01 கைகளை நீட்டிப்பந்தை எறிதல்**

- தோள் மட்டத்தை விட சற்ற அகலக் கால்களை வைத்து நிற்றல்
- முழங்கைகளை மடிக்காது கைகளை நீட்டிப்பந்தைப் பிடித்தல்
- இந் நிலையிலேயே உடம்பை முழங்காலில் மடித்துப் பணிதல்
- மேலே உயரும் போது பந்தை இரு கைகளாலும் சற்று மேலேயும் முன்னோக்கியும் எறிதல்.

**படிமுறை 02: கைகளை நீட்டிப்பந்தைப் படித்தலும் எறிதலும்**

- தோள்களுக்கு சற்று அகலக் கால்களை வைத்த நிற்றல்
- சகபாடியால் அனுப்பப்பட்ட பந்தைக் கைகளை நீட்டிப்பிடிக்கும் வேளை முழங்கால்களை மடித்து உடம்பைக் கீழ் நோக்கிப்பணித்தல்
- முழங்கால்களை நிமிர்த்தி உடல் நிமிரும் வேளை இரு கைகளாலும் பந்தை முன்னே எறிதல்.

**படிமுறை 03 : எதிரே வரும் பந்தைப் பிடித்தலும் எறிதலும்**

- சமனிலையைப் பேணிய வண்ணம் நிற்றல்
- இவர் நிற்கும் இடத்திற்கு இரண்டு கவடுகள் அளவு தூரத்தே விழும் வண்ணம் சகபாடியால் பந்தை அனுப்புதல்
- இவர் பந்தினருகே சென்று, கைகளை நீட்டிப் பந்தைப்பிடித்தவண்ணம், முழங்காலை மடித்து உடம்பைப் பணித்தல்
- உடலை நிமிர்த்தும் வேளை இருகைகளாலும் பந்தை முன்னோக்கி எறிதல்.



**படிமுறை 04 : கீழ்கையால் பந்தை உயர்த்தும் நுட்பத்தைப் பயிலுதல்**

- ஆரம்ப நிலையில் கைகளை வைத்திருக்கும் முறை
- கைகளிரண்டையும் பிடிக்கும் முறை
- சமனிலையைப் பேணிய வண்ணம் கால்களில் நிற்கும் முறை.
- முண்டத்தை வைத்திருக்கும் முறை
- கைகளில் பந்து படும் இடம்

**செயற்பாடு -02 (2 ஆம் பாட வேளை)**

**படி முறை 01: ஓரிடத்தில் நின்று கிழ்கை உயர்த்து முறையில் பந்தை உயர்த்துதல்**

- நுட்பத்திற்கமைய இரு கைகளையும் சேர்த்தபடி ஆரம்ப நிலையில் ஒருவர் நிற்பார்
- இவரது சகபாடி இவரது கையின் மேல் (பந்து படவேண்டிய) இடத்தில் பந்தை வைத்த ஒரு கையால் பிடித்தபடி நிற்பார்
- பந்தின் மேலுள்ள கையால் பந்தைச் சகபடி கீழ் நோக்கி அமுக்குவார் இவ் வேளை இவர்களைச் சற்றுத் தளர்த்து முழங்காலைச் சுற்றி மடித்து கீழ் சென்று பின்பு மேலே உயர்தல்
- இச் செயலைப் பல தடவைகள் தொடர்ந்து செய்தல் வேண்டும்.

**படிமுறை 02: கீழே விழுந்த பந்தைக் கீழ்க்கை உயர்த்தும் முறையில் அடித்தல்**

- பந்தை உயர்த்துபவர் கைகளைச் சேர்க்காது நுட்பம் பயிலுவதற்கான ஆரம்ப நிலையில் நிற்றல்.
- சகபாடி இவரைப் பார்த்த வண்ணம் 03 மீற்றர் தூரத்தில் பந்துடன் நிற்றல்.
- இவருக்கு முன்னே பந்து தெறித்து எழும் வண்ணம் எறிதல்.
- பயிற்சி பெறுபவர் தனது கைகளை நீட்டி முழங்கால்களை நிமிர்த்தி கீழ்க்கை உயர்த்தும் முறையில் பந்திற்கு அடிப்பார்.
- இதனைப் பல முறை செய்து பயிற்சி பெறல்.

**படிமுறை 03: தொடர்ச்சியாக இம்முறையாகப் பந்தினை உயர்த்துதல்**

- பந்து கீழே விழாதவாறு தொடர்ந்து சுயமாக மேலே பல தடவைகள் அடித்தல் இதனை ஒரு விளையாட்டாகவும், தனித்தனியாகவும், குழு ரீதியாகவும் போட்டியாகவும் நடாத்தலாம்.

**படிமுறை 04 : சோடி, சோடியாகச் சேர்ந்து "கீழ்க்கைப் பந்து உயர்ப்பு" முறையில் விளையாடுதல்**

- ஒருவர் ஒருவரைப் பார்த்த வண்ணம் 03 மீற்றர் தூரத்தில் சோடி சோடியாக நிற்றல்
- ஒருவர் தனது கையில் இருக்கும் பந்தைக் கீழ் கை முறையில் உயர்த்தி மற்ற வருக்கு அனுப்புவார். அப்பந்து கீழே விழுந்து தெறித்து வரும் போது மற்ற வர் இம் முறையாக மற்றவருக்குப்பந்தை அனுப்புவார்.
- இதனைத் தொடர்ந்து செய்தல்.

படிமுறை 05

- மேற்கூறியமுறையில் சோடி சோடியாக நிற்றல் பந்தைக் கீழே விழ விடாது தொடர்ச்சியாக இம்முறையில் அடித்தல்.

**கீழ்க்கைப்பணிப்பு (under arm sevice) 01 பாடவேளை**

படிமுறை 01: **கீழ்க்கைப் பணிப்பு முறையில் உடல் அவயவங்கள் தொடர் பாக பின்வரும் விடயங்களைக் குறிப்பாகக் கவனித்தல் வேண்டும்.**

- கால்களை வைத்திருக்கும் முறை
- கைகளை வைத்திருக்கும் முறை
- ஆரம்ப நிலையில் பின்காலில் உடற்பாரத்தைத் தாங்குதலும் பின்பு முன் காலுக்கு மாற்றுதலும்.
- பணிக்கும் போது கவனிக்க வேண்டிய காரணிகள்.

படிமுறை 02 : **சுவரைப்பார்த்த வண்ணம் நின்று சுவருக்குப் பணித்தல்**

- பணிப்பவர் சுவரைப்பார்த்த வண்ணம் 04 மீற்றர் தூரத்தில் நிற்றல்.
- கீழ்க்கைப் பணிப்பு முறையில் சுவருக்க முறையாகப் பந்தைப் பணித்தல்.

படிமுறை 03: **எதிரணியின் பிரதேசத்திற்குப் பணித்தல்**

- பணிப்பவர் வலையைப் பார்த்த வண்ணம் 05 மீ தூரத்தில் நிற்றல்.
- கீழ்கைப்பணிப்பு முறையில் எதிர்தரப்புப் பகுதிக்குப் பந்தைப் பணித்தல்.
- இச் செயற்பாட்டைப் படிப்படியாக 7-9 மீ. தூரத்தில் நின்று செய்தல்.

படிமுறை 04: **இலக்கிற்குப்பணித்தல்**

- ஒரு பக்க மைதானத்தை 4 / 6 / 9 பகுதிகளாகப் பிரித்தல்.
- குறித்த பகுதிகளுக்குள் **பணித்தால் அளிக்கவல்ல** புள்ளிகளை அதே கூட்டில் குறிக்கவும்.
- பணிப்பு வலயத்**துள் இருந்து விதிளுக்க**மைய ஒருவருக்குப் 10 தடவைகள் பணிக்கும் சந்தர்**ப்பத்தை அளிக்கவும்**.
- பந்து விழும் பகுதிக்கு ஏற்ப **புள்ளி வழங்குக.**
- வெற்றியாளரைத் தெரிவு செய்**க.**

**மேற்கைப்பந்து உயர்ப்பு (Over Hand Pass) (02 பாடவேளை)**

**செயற்பாடு..01...(01 ஆம் பாடவேளை)**



படிமுறை : 01: **மேற்கை உயர்ப்பின் போது உடல் அமைவு**

- கைகள் வைத்திருக்க வேண்டிய முறை
- சமனிலை யுடனான கால்களின் அமைவு முறை
- தலை இருக்க வேண்டிய முறை
- பந்து தொடுகையுறும் விரல்களின் பகுதி
- உடன் தொடர் நிலை

படிமுறை: 02 :**கைகளால் பந்தை நிலத்தில் சொட்டுதல்**

- கால்களை அகல வைத்து பந்துடன் நிற்றல்.
- பந்தினை நிலத்தில் சொட்டுதல் (Bounce) அது தெறித்து மேலே வருகையில் கைகளின் விரல்களால் மீண்டும் நிலத்தில் சொட்டுதல்.
- மீண்டும் மேலெழுந்து வரும் பந்தை நிலத்தை நோக்கித் தள்ளுதல்.
- இவ்வாறாகத் தொடர்ந்து செய்தல்.

படிமுறை 03 : **வளியில் இருக்கும் பந்தை மேலே உயர்த்துதல்**

- தனக்கு முன்னே பந்தை நிலத்தில் போடுதல்
- முழங்காலில் மடிந்து கீழே பணிந்து மேற்கை உயர்ப்பு முறையில் பந்தைப் பிடித்தல்.
- இவ்வேளையில் மேற்கை உயர்ப்பின் போது உடல் அமைய வேண்டிய நிலைக்கு வருதல்.
- பல தடவைகள் இச் செயற்பாட்டினைச் செய்தல்.

படிமுறை: 04 :**கையால் பந்தைப் பிடித்தலும் எறிதலும்**

- எதிர் எதிரே 04 மீற்றர் இடைவெளியில் சோடியாக நிற்றல்.
- எதிரே நிற்பவரது தோள் மட்டத்திற்கு சற்று மேலே தான் வைத்திருக்கும் பந்தை ஒரு கையால் தள்ளி அனுப்புதல்.
- முன்னே நிற்பவர் அந்தப் பந்தை ஒரு கையால் பிடித்து மீண்டும் தனிக் கையால் அதேபோல் எறிதல்.
- இதே போலப் பல தடவைகள் தொடர்ந்து செய்தல்.

படிமுறை: 05 : **நிலத்தில் பட்டுத் தெறித்து வரும் பந்தை மேற்கை உயர்ப்பு முறையில் பிடித்தல்**

- தனது கையில் இருக்கும் பந்து நிலம்பட்டுத் தெறித்து தனது உயரத்திற்கு மேல் இருக்கும் போது நிலத்தில் சொட்டுதல்
- பந்து உயரத்தில் மிதந்து வரும் போது அருகே சென்று மேற்கை உயர்ப்பு முறையில் பந்தைப் படித்தல்.

படிமுறை: 06: **பந்தைப் பிடித்தலும் விரைவாக எறிதலும்**

- தன்னிடம் உள்ள பந்தை சாதாரண உயரத்திற்கு மேலே போடுதல்
- பந்திற்கு அருகே சென்று மேற்கை உயர்ப்பு முறையில் பிடித்த கணமே விரைவாக மேலே மீண்டும் எறிதல் (இவ்வேளை மணிக்கட்டுகள்

தொழில்பட வேண்டும்)

- ✱ இவ்வாறாகப் பல முறை செய்தல்

செயற்பாடு 02 (2 ஆம் பாடவேளை)

படிமுறை: 01: மேலே எறிந்த பந்தைப் பதுங்கிய நிலையில் பிடித்தல்

- ✱ தன்னிடமுள்ள பந்தை முன்னோக்கி மேலே எறிதல்
- ✱ விரைவாக பந்தினருகே செல்லுதல் முழங்காலை நிலத்தில் வைத்து மேற்கை உயர்ப்பு முறையில் பந்தைப்பிடித்தல்
- ✱ பல தடவைகள் செய்தல்

படிமுறை: 02: ஓர் இடத்தில் நின்று பந்தை உயரத்தள்ளுதல்

- ✱ மேற்கை உயர்ப்பு முறையில் பந்தைப் பிடித்தல்
- ✱ மேற்கை உயர்ப்பு முறையில் பந்தை உயரத்தள்ளுதல்
- ✱ கீழே வரும் பந்தினை மீண்டும் உயர்த்துதல்
- ✱ இவ்வாறாகத் தொடர்ந்து செய்தல்

படிமுறை:03: முன்னே சென்று பந்தை உயர்த்துதல்

- ✱ தன்வசம் உள்ள பந்தை மேல் நோக்கி முன்னே போடுதல்
- ✱ பந்து நிலம் படும் இடத்தினருகே சென்று மேற்கை உயர்ப்பு முறையில் பந்தை முன்னோக்கி உயர்த்துதல்
- ✱ பல முறை இவ்வாறாகச் செய்தல்

படிமுறை: 04: முன்நோக்கி ஓடிச்சென்று மேலே பாய்ந்து, பந்தை உயர்த்துதல்

- ✱ தன்வசம் உள்ள பந்தை முன்னோக்கி மேலே தள்ளுதல்
- ✱ பந்து நிலம்படும் இடத்திற்கு அருகே ஓடி, உயரப் பாய்ந்து மேற்கை உயர்ப்ப முறையில் பந்தை உயர்த்துதல்
- ✱ பல தடவைகள் செய்து பழகுதல்

படிமுறை 05: சுவரில், நிலத்தில் பட்டு வரும் பந்தை உயர்த்துதல்

- ✱ சுவரைப் பார்த்த வண்ணம் 04 மீற்றர் தூரத்தில் பந்துடன் நிற்றல்
- ✱ சுவரில் படும்படியாக இம்முறையில் பந்தை உயர்த்துதல்
- ✱ சுவரில் தெறித்து நிலத்தில் விழுந்து மேல் எழும் பந்தை மீண்டும் இம்முறையில் உயர்த்துதல்
- ✱ தொடர்ந்து சில தடவைகள் செய்தல்

படிமுறை 06: சோடியாக இம்முறையில் பந்தை உயர்த்துதல்

- ✱ எதிர் எதிரே 3-4 மீற்றர் இடைவெளியில் சோடியாக நிற்றல்
- ✱ பந்துடன் நிற்பவர் மேற்கை உயர்ப்பு முறையில் முன்னே நிற்வருக்கு பந்தை அனுப்புதல்



- ✱ முன்னே நிற்பவர் பந்தினருகே சென்று தனக்கு முன்னே நிற்பவருக்கு இதே முறையில் மீள அனுப்புதல்
- ✱ தொடர்ச்சியாகச் சில தடவைகள் செய்தல்.

## ஆண்டு 11

*10 பாட வேளைகள் (04 போதனமுறை 06 செய்முறை)*

போதனை முறை 04 பாடவேளைள்

- ✱ விதி இல...15...16...17...18....., 01 ஆம் பாடவேளை
- ✱ விதி இல...19...20...21....22....., 01 ஆம் பாடவேளை
- ✱ விதி இல....23....24....25....26...., 01 ஆம் பாடவேளை
- ✱ விதி இல....27...28...29...30......., 01 ஆம் பாடவேளை

செய்முறை : 06 பாடவேளைகள்

- ✱ மேற்கைப்பணிப்பு (Over Hand Service) 01 பாட வேளை

படிமுறை 01: மேற்கைப்பணிப்பின் போது உடலின் அமைவு

- ✱ பந்தை அடிக்கும் கைப்புறம் உள்ள காலை பின்னே வைத்து நிற்றல்
- ✱ உடற் பாரத்தைப் பின் காலில் தாங்குதல்
- ✱ அடிக்க முன்பும், அடிக்கும் வேளையிலும் இக் கையின் செயற்பாடு.
- ✱ உடன் தொடர் நிலை

படிமுறை : 02: சுயாதீன கையில் உள்ள பந்தினை அடித்தல்

- ✱ மேற்க் கைப்பணிபிற்கு ஏற்ற முறையில் நிற்றல்
- ✱ சுயாதீனக் கையின் உள்ளங்கையில் பந்தைத் தாங்குதல்
- ✱ தோள் மூட்டு உயரம் அளவில் கையை உயர்த்துதல்
- ✱ உடற் பாரத்தை முன் காலிற்கு மாற்றி பந்தினை மற்றயக் கையால் அடித்தல் (அடித்த பின்பு பந்து சுயாதீனக்கையின் உள்ளங்கையிலேயே இருத்தல் வேண்டும்.)

படி முறை : 03 : எதிர் தரப்பிற்குப் பந்தைப் பணித்தல்
(வலை கட்டப்பபட்ட அடையாளமிடப்பட்ட மைதானம்)

- ✱ வலைக்கு 03 மீற்றர் தூரத்தே நிற்றல் (தாக்கற்கோட்டில்)
- ✱ மேற்கைப்பணிப்பு முறையில் வலைக்கு மேலாக எதிர் தரப்புப் பகுதிக்குள் பந்தைப் பணித்தல்

படிமுறை 04 : 5,7,9 மீற்றர் தூரங்களில் நின்று பந்தைப் பணித்தல் (ஆண்டு 10 இன் செயற்பாட்டினை இங்கும் மாதிரியாகக் கொள்க)

பந்தினைப் பெறுதல் (Ball Reciving or Ball Reception) (01 பாடவேளை)

படிமுறை 01 : பந்தைப் பெறுதல்

- இதற்கான அடிப்படை உடல் நிலையைப் பயிற்றுதல்
- தான் நிற்கும் இடத்தில் இருந்து முன்னே, பின்னே, பக்கங்களுக்குப் பந்தை அண்மிக்கும் முறைகள்
- பொதுவானமுறை
  முன்னே செல்லும் போது பின்னே உள்ள காலை முன்னே வைத்தல் பின்னே செல்லும் போது முன்னே உள்ள காலை பின்னே வைத்தல்

**பக்கக்கவடு முறை** (Side Step Method)

படிமுறை 02

- குறுக்குக்கவடு வைத்தல் முறை (Cross Step Method)
- பந்தின் பக்கம் திரும்பி பந்தை நோக்கி ஓடும் முறை (Turn and Run to the ball)

**பந்தை உயர்த்துதல்** (Setting) பாடவேளை 01

- (மாணவரின் திறமைகளுக்கேற்ப படிமுறைகளை வகுக்க)

படிமுறை 01 : **அறைதலுக்காகப் பந்தை உயர்த்துதல்**

- கீழ்கை, மேற்கை, இரு முறைகளிலும் பந்தை உயர்த்துதல்
- பல்வேறு வகைகளில் அமைந்த மேற்கை உயர்ப்பு முறைகள் (முறையில் இலகுவாகப் பந்தைக் கட்டுப்படுத்தலாம்)
  முன்னே, உயர்த்துதல், பின்னே உயர்த்துதல், பக்கங்களுக்கு உயர்த்துதல்

படிமுறை 02

- சாதாரணமாக நின்று உயர்த்துதல்
- ஒரு முழங்காலை நிலத்தில் வைத்து உயர்த்துதல்
- மேலே பாய்ந்து உயர்த்துதல்

படிமுறை-03

- வலையின் வலது, இடது,மத்தி, எனப் பந்தை உயர்த்துதல்
- பல்வேறு உயர அளவுகளில் பந்தை உயர்த்துதல்

**அறைதல்** (Spike) **(பாடவேலை 01)**

**படிமுறை 01 உடற் செயற்பாடுகள்**

- பந்தினை அறைய, மேல் எழ முன்பு உடலை வைத்திருக்கும் முறை
- கைகளை வைத்திருக்கும் முறை
- இடுப்பிற்கு மேற்பகுதியின் தன்மையும், வைத்திருக்கும் முறையும்

படிமுறை 02

- மேலே பாய்ந்த பின்பு உடல் செயற்படும் முறை
- பந்திற்கு அறையும் போது கைகளின் செயற்பாடு
- உடன் தொடர் நிலையும் நிலம்படலும்
- (இச் செயற்பாடுகளை ஓர் இடத்தில் நின்று உயரப்பாய்ந்து செய்தல்)



**படிமுறை 03**

- **ஒரு கவட்டை முன்னே வைத்து மேல் எழல்**
- **இரு கவடுகளை முன்னே வைத்து மேல் எழல்**

**படிமுறை 04**

- பந்தினை அறையும் முறையில் மேலே பாய்ந்து பந்தைப் பிடித்தல்.
- ஒரு கவடு முன்னே வைத்து மேலே பாய்ந்து பிடித்தல்.
- இரு கவடுகள் முன்னே வைத்து மேலே பாய்ந்து பிடித்தல்.
- (இன்னுமொருவர் பந்தை வலையருகே பிடித்தல் வேண்டும்)

**தடுத்தல்** (Block) **(பாடவேளை 01)**

படிமுறை 01.

**உடல் அமைவும் ஒற்றைத் தடுப்பு முறையும்**

- தடுப்பதற்காக மிதித்தெழு முன் உடலை வைத்திருக்கும் முறை
- வளியில் உடலை வைத்திருக்முறை
- தனித் தடுப்பு முறை (Single Block)

படிமுறை 02 **இரட்டைத்தடுப்பு முறை** (Double Block)

- இருவரும் இணையும் முறை பற்றிக் கூறல்
- மத்தியில் இருக்கும் வீரரும் இடது பக்க வீரரும் இணைதல்
- மத்தியில் உள்ளவருடன் வலது பக்கம் உள்ளவர் இணைதல்

படிமுறை 03 : **திரித்துவத் தடுப்பு முறை** (Trible Block)

- வீரர்கள் இணையும் முறையினைக் கூறுதல்
- பக்கத்திற்குக் காலை வைத்து (Side Step) அருகில் செல்லுதல்
- பாதங்களைக் குறுக்காக (Cross Step) வைத்து அருகில் செல்லுதல்
- பந்தை நோக்கி ஓடுதல் (Dash)



## My Sincere Thanks to........

- *Mr. Sunil Jayaweera, Deputy Director General (P.E. & Sports)*
  *Ministry of Education and Higer Education*
- *Mrs. Olivia Gamaghe, Directors of Education (Sports)*
  *Ministry of Education and Higher Education.*
- *Mrs. Shanthy Unanthana Directors of Education (P.E)*
- *Mr. S Alagaratnam, President, C.O.E. Vavuniya.*
- *Mr. S. Arulpragasam Lecturer, Palaly G.T.C.*
- *Miss. Mangalika Weerasinghe Project officer (Heath & Phy Edu)*
  *National Institute of Education - Maharagama.*
- *Mr. S. Thotaliyanaghe Lecturer, Siyena College of Education.*
- *Mr. N. Guruparan and his staff - Karthikeyan (Pvt) Ltd.*
- *Mr. Vijaya Kiruba*
- *Mr. K. Mayuran*
- *Physical Education Union. C.O.E. Vavuniya.*

---


**உசாத்துணை நூல்கள்**

- இலங்கையில் வொலிபோல் வளர்ச்சி 1916 - 1985 (சிங்களம்)
- வொலிபோல் செய்திகள் (சிங்களம்)
- வொலிபோல் சர்வதேச விதிகள் (ஆங்கிலம், சிங்களம்)
- மொடியூல்கள் - தமிழ் (தேசிய கல்வி நிறுவகம்)
- 10ஆம், 11ஆம் ஆண்டிற்கான உடற்கல்வி பாட விதானம் (தேசிய கல்வி நிறுவகம்)
- 'வொலிபோல்' என்ற நூல் (தமிழ்)

☆ சர்வதேச விதிமுறைகள்,

☆ தேசிய, சர்வதேச வரலாறு,

☆ 10ம் 11ம் ஆண்டுகளுக்கான

பாட விதானத்திற்கமைந்த

செய்முறை, போதனைமுறை

விளக்கங்கள்





Printed by New Karthigeyan (Pvt) Ltd. 501/2, Galle Road, Colombo-6. Tel:595875